விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 228 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 18 சனிக்கிழமை (03.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

266 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட

## தாளையடி கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம் திறப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கிளிநொச்சி நீர்வழங்கல் வேலைத் திட்டத்தின் கீழ் தாளையடி கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் தலைமையில் நேற்று திறந்து வைக்கப் பட்டது. 15

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில்

## பெரும் செல்வந்தர்களை காப்பாற்றும் அரசாங்கம் - சஜித்



(குருநாகல்)

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில் பெரும் செல்வந்தர்களையே அரசாங்கம் காப்பாற்றுகின்றது என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தி யுள்ளார்.

குருநாகலில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 15

காணி, பொலிஸ் அதிகாரத்துடன்

# 13 ஆவது திருத்தம் அமுலாகும்

## சுமந்திரனுடனான சந்திப்பில் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

காணி, பொலிஸ் அதிகாரத்துடன் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என சுமந்திரன் எம்.பியுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

லங்கா சதொசவில்


## பல பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

லங்கா சதொசவில் பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட் டுள்ளன. 15

20 கிலோ கஞ்சாவுடன்

## யாழ்.செம்மணியில் இளைஞன் கைது



15

## பொலிஸில் முறையிடச் சென்றவர் மோ.சைக்கிள் மோதியதில் மரணம்

### நுணாவில் சந்தியில் சம்பவம்

(சாவகச்சேரி)

பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்து விட்டு வீடு நோக்கிப் பயணித்த வர் மோட்டார் சைக்கிள் மோதியதில் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி நுணாவில் சந்திப் பகுதியில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு 9 மணியளவில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துவிட்டு வீடு சென்ற நபரை வேகமாக வந்த 15

## யாழ். மக்களின் குடிநீர்த் தேவைக்காக நதித் திட்டம் விரைவில் ஆரம்பம்

### யாழில் ஜனாதிபதி ரணில்



(யாழ்ப்பாணம்)

யாழ்மக்களின்குடிநீர்த்தேவைக்கு முழுமையான தீர்வு வழங்க யாழ். நதித்திட்டம் விரைவில் ஆரம்பிக் கப்படும் என ஜானாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் தாளை யடி கடல் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைக் கும் நிகழ்வில் நேற்று முற்பகல் கலந்து கொண்டபோதே ஜனாதி பதி இதனைத் தெரி வித்தார். 15

## ஜே.வி.பியின் கொள்கையில் கல்விக்கே முதலிடம்

### அநுர குமார தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்பும் ஜே.வி.பியின் கொள்கைகளில் கல்விக்கே முதலி டம் என ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். 15

மர்மமான முறையில்

## முள்ளியவளையில் யானை மரணம்

(நெளுக்குளம்)

முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஜங்கன் குளம் பகுதியில் மர்மமான முறையில் உயிரிழந்த நிலை யில் யானையின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள் ளது. 15

## நாட்டின் வாகன இறக்குமதி வருமானத்தை அதிகரிக்கும்

### சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)


வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளின் உத்தேச தளர்வு 2025ஆம் ஆண்டின் வருவாய் திரட்டலை அதிகரிக் கும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் முன்னெடுக் கப்படும் பொருளாதார சீர் திருத்தத் திட்டத்தின் முன் னேற்றம் உள்ளிட்ட விடயங் கள் தொடர்பில் ஆராய்வதற் காக சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை ஆதீனத்தை சந்தித்த ஜனாதிபதி ரணில்



யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளிடம் ஆசிபெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் சமயப் பெரியார்கள், அரச உயரதிகாரிகள், இந்து சமய கலாசார அலுவலகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ம-7,33)

# கொழும்பு துறைமுகத்தில் இந்திய நீர்மூழ்கி



(கொழும்பு)

இந்திய கடற்படைக்கு சொந்தமான நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்து சமுத்திரத்தில் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு பணிகளின் ஒரு அங்கமாக ஐ.என்.எஸ் ஷல்கி எனப் பெயரிடப்பட்ட குறித்த நீர்மூழ்கிக் கப்பல் நேற்று காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததாக கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த நீர்மூழ்கிக் கப்பல் 64.4 மீற்றர் நீளம் கொண்டதுடன் மணிக்கு 22 கடல் மைல் வேகத்தில் செல்லும் திறன் கொண்டது.

குறித்த நீர்மூழ்கிக் கப்பல் நாளை இலங்கையிலிருந்து வெளியேறும் என கடற்படை அறிவித்துள்ளது. (ம-7)

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட 14 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்

2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரை 14 வேட்பாளர்கள் தமது கட்டுப்பணத்தை வைப்பிலிட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, ரணில் விக்கிரமசிங்க, சரத் கீர்த்திரத்ன, ஓஷல ஹேரத், ஏ. எஸ். பி. லியனகே, சஜித் பிரேமதாச, பீ. டபிள்யூ. எஸ். கே. பண்டாரநாயக்க, விஜயதாச ராஜபக்ஷ, கே.கே. பியதாச, சிறிதுங்க ஜயசூரிய, அஜந்த டி சொய்சா, கே. ஆனந்த குலரத்ன, சரத் மனமேந்திர, வணக்கத்துக்குரிய பத்தரமுல்லை சீலரதன தேரர் மற்றும் அக்மீமன தயாரதன தேரர் ஆகியோர் கட்டுப்பணத்தை வைப்பிலிட்டுள்ளனர். (ம-7)

# 3 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்படவுள்ளது

எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை 3 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

முட்டை விலை அதிகரிப்பு காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இம்மாதம் முதல் முட்டைகளை இறக்குமதி செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் முட்டையொன்றை 38 அல்லது 40 ரூபாவிற்கு விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உள்ளூர் சந்தையில் முட்டை விலையை ஸ்தரப்படுத்தும் நோக்கில் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், கேக் மற்றும் பேக்கரி தொழிலுக்குத் தேவையான முட்டைகளை விநியோகிக்கும் வகையிலும் முட்டைகளை இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# ஓகஸ்ட் 6 முதல் 9 வரை பாராளுமன்றம் கூடும்

பாராளுமன்றம் எதிர்வரும் 06ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை கூடவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற பாராளுமன்ற அலுவலகள் பற்றிய குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-7)

# பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசத்தினை பதவியிலிருந்து நீக்குக – கஞ்சன

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் (SLPP) பொதுச் செயலாளர் சாகர காரியவசத்தின் நடவடிக்கைகள் கட்சிக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதால் அவரை அந்தப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜய சேகர தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

ஜனாதிபதித் தேர்தலில் பெரமுன தனது சொந்த வேட்பாளரை நிறுத்துவது கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் கருத்து அல்ல. கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானம், மகிந்த ராஜபக்ஷவுடனான முன்னைய சந்திப்பின் போது எமக்கு அறிவிக்கப்பட்ட தீர்மானம் அல்ல.

சாகர காரியவசத்தை பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்குவதற்கு முன்மொழிய தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7)

## 13 ஆவது...

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இருவரும் பேசி இணக்கம் கண்ட ஏற்பாடுகளின்படி,

13ஆம் திருத்தத்தில் இருக்கும் காணி அதிகாரப் பகிர்வை மாகாண சபைகள் உடனடியாக பிரயோகிப்பதற்குத் தேசிய காணி ஆணைக் குழு நிறுவப்பட வேண்டும். தேசிய காணி ஆணைக்குழுவுக்கான கட்டமைப்பு தயாராக இருப்பதாகவும், அது உடனடியாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்படுவதற்கு காலதாமதம் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தச் சந்திப்பின்போது உறுதி கூறினார்.

தேசிய காணி ஆணைக் குழு நிறுவப்பட்டு காணிகள் தொடர்பான தேசிய கொள்கைகள் வகுக்கப்பட்டால், காணிகள் நேரடியாக மாகாண நிர்வாகத்தின் கீழ் வந்துவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவும் உடனடியாக நிறுவப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மூலம் மாகாணங்களுக்குப் பகிரப்பட்ட பல அதிகாரங்கள் காலத்துக்குக் காலம் மீளப்பெறப்பட்டுள்ளன. அவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக மாகாணங்களுக்கு மீளப் பகிரும் ஏற்பாடுகள் எந்தத் தாமதமுமின்றி உடனடியாகவே மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்தார்.

மேலும், 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் பொலிஸ் அதிகாரப் பகிர்வு உள்ளது. ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் எல்லாத் தரப்புகளுடனும் பேசி, இணக்கம் கண்டு, அதைச் சுமுகமாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி கூறினார். (ம-7)


## மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்தினரால் நடாத்தப்படும் காசநோய் விழிப்புணர்வுக்கான மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி 2024

உலக காசநோய் தினத்தினை முன்னிட்டு யாழ்ப்பாணம் மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்தினரால் நடாத்தப்படும் (அரசாங்கம் மற்றும் தனியார்) திணைக்களங்களுக்கு இடையிலான 11 பேர் 12 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டச்சுற்றுப்போட்டியில் பங்கு பெற விரும்பும் அணியினர் தங்களின் அணியின் விபரங்களினை 07.08.2024 திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் மார்பு நோய்ச்சிகிச்சை நிலையம் பண்ணை என்னும் முகவரிக்கு நேரடியாக வந்து விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து தருமாறும் ஒவ்வொரு அணியினரும் 5000 ரூபா செலுத்தி விண்ணப்பப் படிவத்தினை யாழ்ப்பாணம் மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனை தெரிவிக்கின்றோம்.

மாவட்ட காசநோய்க்கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி,
மார்பு நோய்ச்கிச்சை நிலையம்,
பண்ணை.

தொடர்புகளுக்கு:
0774883761

(1604)



## செந்தமிழ் வழிபாட்டுப் பயிற்சி நெறியும் வேலை வாய்ப்பும்

தென்னாடு

யாழ்ப்பாணம் கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில், தமிழ் வழிபாடு ஆற்றுவதற்கு அர்ச்சகர்கள் தேவை. முன்அனுபவம் இல்லாதவர்களும் பயிற்சியின் பின்னர் தக்க தீக்கைகள் பெற்று வழிபாடு ஆற்றும் தகைமையைப் பெற்றுக்கொள்ளலாம். பயிற்சிக்கான சான்றிதழ்களும் வழங்கப்படும். பயிற்சிநெறிகள் வருகின்ற ஆவணித் திங்கள் முதலாம் நாள் அன்று (17-08-2024) ஆரம்பமாகும்.

இருக்குமிடம் வழங்கப்படும். சம்பளம் அடிப்படை 35,000 மற்றும் சிறப்பு பூசைகளுக்கு மேலதிக கொடுப்பனவுகளும் உண்டு.

(C-912)

தொடர்புகளுக்கு:
தென்னாடு சிவமடம் - 070 770 1111


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு
# நினைவு நாள் அழைப்பு

கடந்த 15.08.2023 அன்று
சிவபதமடைந்த எங்கள்
குடும்பத் தலைவி



அமரர்

## புஸ்பநாதன் திருலோகநாயகி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 1970.01.22 | 2023.08.15 |

அம்மா என அழைத்தால்
ஓடிவந்து அணைப்பவளே – இன்று
அம்மா, அம்மா என அறுகிறோம்
உன் திருமுகம் காண முடியவில்லையம்மா
ஆண்டொன்று ஆனதம்மா உன்திருமுகத்தை
காணவில்லை
மீண்டும் இங்கே வாராயோ – எம்
வேதனைகள் தீராயோ?
அப்பா இங்கே கதறுகிறார் – என்
கண்மணி எங்கே போனதென்று
கண்ணீர் ஒன்றே தஞ்சமென்று – என்
கவிதை உன்னை கெஞ்சுதம்மா
ஆழ்கடல்தான் உன் அன்பு – அதில்
அலைபோல் தவழ்ந்தோம் உன் மடியில்
தேன் போன்ற உன் சிரிப்பு – அதில்
எம் கவலை எல்லாம் பறந்துவிடும்
உன் காலடியில் கெஞ்சுகிறோம்
மீண்டும் நீ எம்மிடம் வந்திடம்மா
உன் ஞாபகத்தில் என்றும் நாம்
வெதும்பி வெதும்பி அழுகின்றோம்.
வேதனையில் தவிக்கின்றோம்.
எம் குடும்பத்தின் ஒளி விளக்காய்
ஒளிர்ந்தவளே அம்மா
நீ அணைந்து ஓராண்டு ஓடி மறைந்தாலும்
உன் சிரித்த முகத்தை முன் நிறுத்தி
என்றும் உங்கள் நினைவுடனே வாழுகிறோம்
எமக்காய் நீ இங்கே மறுபடியும்
வந்து பிறந்திடம்மா.

(219)

முதலாம் ஆண்டு நினைவையொட்டி 04.08.2024 நாளை ஞாயிற்றுக்கிழமை மதியம் 11.00 மணியளவில் செல்வச்சந்நிதி மணியம் மட திருமண மண்டபத்தில் நடைபெறும். மதியபோசன நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

"மணியம் மடம்" (திருமண மண்டபம்)
செல்வச்சந்நிதி கோவிலடி,
தொண்டைமானாறு.

தகவல்: குடும்பத்தினர்
077 664 8653, 077 604 0087

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## சங்காவை தெரிவு செய்ய இங்கிலாந்து அணி மும்முரம்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் ஒருநாள் போட்டித் தலைமைப் பயிற்றுவிப்பாளராக இலங்கை அணியின் முன்னாள் வீரர் குமார் சங்கக்காரவை தெரிவு செய்வதில் இங்கிலாந்து அதிகாரிகள் அதிக ஆர்வம் காட்டி வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தற்போதைய ஒரு நாள் பயிற்சியாளர் அவுஸ்திரேலிய மத்யூ மோட்டின் அடுத்த வாரம் நிறைவடைய உள்ள நிலையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், சங்கக்காரவுக்கு மேலதிகமாக, முன்னாள் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் மைக்கல் ஹசி மற்றும் ஆப்கானிஸ்தான் தலைமைப் பயிற்றுவிப்பாளர் மற்றும் முன்னாள் இங்கிலாந்து பேட்ஸ்மேன் ஜொனாதன் ட்ரொட் ஆகியோர் இங்கிலாந்து ஒரு நாள் சர்வதேசப் போட்டி தலைமைப் பயிற்றுவிப்பாளர் பட்டியலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

### பாரிஸ் ஒலிம்பிக்

## சிந்து அதிர்ச்சித் தோல்வி

### ஹட்ரிக் பதக்கம் தகர்ந்தது





பாரிஸ் ஒலிம்பிக் பட்மின்டன் "ரவுண்ட்-16" போட்டியில் இந்தியாவின் சிந்து அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு "ரவுண்ட்-16" போட்டியில் இந்தியாவின் சிந்து, சீனாவின் ஹி பிங் ஜியாவோ மோதினர். ரியோ (வெள்ளி, 2016), ரோக்கியோ (வெண்கலம், 2021) ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற சிந்து, பாரிசிலும் சாதிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. முதல்செட்டை 19-21 என இழந்த சிந்து, இரண்டாவது செட்டை 14-21 எனக் கோட்டை விட்டார். முடிவில் சிந்து 19-21, 14-21 என்ற நேர் செட் கணக்கில் தோல்வியடைந்து வெளியேறினார். இதன் மூலம் ஒலிம்பிக்கில் "ஹட்ரிக்" பதக்கம் வெல்லும் சிந்துவின் கனவு தகர்ந்தது. (ம-7)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3186

**அனாமிகா**




**கஜானன்**





**துவாரகன்**




**அக்ஷயன்**




**பிரசாந்**




**விதுஷன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்புலன்ஸ் இல்லாததால் நோயாளர்கள் அவதி

(அக்கராயன்)

**கிளிநொச்சி வேரவில் பிரதேச வைத்தியசாலையில் கடந்த ஓர் ஆண்டுகளாக அம்புலன்ஸ் இல்லாததன் காரணமாக முழங்காவில், கிளிநொச்சி பொது வைத்தியசாலைகளுக்கு நோயாளர்கள் செல்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.**

மிகவும் பின்தங்கிய கிராமத்தில் வேரவில் வைத்தியசாலை அமைந்துள்ளது. 1,000 வரையான குடும்பங்கள் இவ் வைத்திய சாலையினை நம்பியுள்ளன. பல்ல வராயன்கட்டுச் சந்தியில் இருந்து வேரவில் வைத்திய சாலை வரையான வீதி தற்காலிகமாக சிறந்து முறை யில் புனரமைக்கப்பட்டுள்ள போதிலும் வைத்தியசாலை யில் அம்புலன்ஸ் இல்லாத நிலைமை உள்ளது.

பல்லவராயன்கட்டில் இருந்து வேரவில் வைத்தியசாலை வரையான வீதி திருத்தப்பட்டால் அம்புலன்ஸ் ஓடும் என அதிகாரிகள் தெரிவித் திருந்தனர். தற்போது வீதி திருத்தப்பட்டுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட தரப்புக்கள் நடவடிக்கை எடுத்து குறித்த அம்புலன்ஸ் சேவையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டு கோள்விடுத்துள்ளனர். (நி-6-350)

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம், தொண்டைமானாறு வருடாந்த மகோற்சவம்- 2024

மேற்படி ஆலயத்தினுடைய 2024 ஆம் ஆண்டிற்குரிய மகோற் சவமானது எதிர்வரும் 04.08.2024 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 19.08.2024 அன்று தீர்த தோற்சவத்துடன் நிறைவடைய உள்ளது.மேற்படி மஹோற்சவம் தொடர்பில் ஆலயத்தில் வடமராட்சி வடக்கு. பருத்தித் துறை பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற ஏற்பாட்டுக் கூட்டத்தில் மகோற்சவ காலத்தில் பின்வரும் ஏற்பாடுகளையும் நடைமுறைகளையும் பின் பற்றுவது தொடர்பாக தீர்மானிக்கப்பட்டது.

1.ஆலய வழிபாட்டிற்கு வருகை தரும் அடியார்கள் எமது பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் பிரதிபலிக்கும் ஆடைகளை அணிந்து ஆசாரசீலர்களாக வருகை தந்து ஆலயத்தின் புனிதத்தை பேணுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

2.ஆலயத்திற்கு வருகை தரும் அடியார்கள் பெறுமதி மிக்க தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்த்துக் கொள்ளவும்.

3.ஆற்றில் நீராடும் அடியார்கள் ஆற்றில் போடப்பட்டுள்ள மிதக்கும் எல்லைகளை தாண்டி செல்ல வேண்டாம். அங்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

4. மகோற்சவ காலத்தில் ஆலயத்திற்கு வருகை தரும் எந்தவொரு வாகனமும் வீதித் தடைகளுக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது. சைக்கிள் மோட்டார் சைக்கிள், கார், வான், முச்சக்கரவண்டி மற்றும் வேறு வாகனங்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட பாதுகாப்பு தரிப்பிடத்தில் நிறுத்தப்பட வேண்டும்.

5. ஆலயவளாகத்தில் வீதித் தடைகளுக்கு உள்ளே உள்ள அன்னதான மண்டபங்களுக்கும், மற்றும் ஆலய வளாகத்தில் வீதித்தடைகளுக்கு உள்ளே வசிக்கும் குடும்பங்களுக்கும் மற்றும் ஆலயத்திற்கு தேவையான பொருட்களை வாகனத்தில் ஏற்றிச் செல்வதற்கும் பிரதேச செயலகத்தால் வழங்கப்படும் அனுமதி பத்திரத்தை பயன்படுத்தி தமது தேவையின் நிமித்தம் பிரயாணங்களை மேற்கொள்ளமுடியும்.

6. ஆலய வளாகத்தில் உள்ள விற்பனை நிலையங்களுக்கு பொருட்களை ஏற்றி இறக்கும் பணியினை மேற்கொள்வதற்கு விசேடமாக வழங்கப்படவுள்ள அனுமதி அட்டையில் குறிக்கப்பட்ட நேரத்தில் வீதித்தடையில் கடமையில் உள்ள பொலிஸாரிடம் காண்பித்து அனுமதி பெற்று உள்நுழைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

7. நகர சபையில் அனுமதி பெறாத நடைபாதை வியாபாரிகளுக்கும், தற்காலிக கடைகளுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

8. கடை உரிமையாளர்கள் நகர சபையின் உதவியுடன் ஒவ்வொரு நாளும் முறையாக கழிவகற்றல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

9. பொருட்களின் நிர்ணயிக்கப்பட்ட விலையினை மீறி அதிக விலைக்கு விற்பனை செய்வோர் மீது விலைக் கட்டுப்பாட்டு பிரிவினரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

10. தனியார் காணிகளில் அமைந்திருக்கும் நிரந்தர கடைகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்பதுடன் ஆலய வீதியிலும் ஆலயத்திற்கு செல்லும் வீதிகளிலும் போக்குவரத்திற்கு தடை ஏற்படுத்தும் வகையில் நடை பாதை வியாபார நடவடிக்கைகளுக்கும் தற்காலிக கடை அமைக்கப்படுவதற்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது.

11. ஆலய பூசைகளின் போது ஆலய சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்ற தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12.ஆலய மகோற்சவ காலத்தில் உணவு நிலையங்கள் அமைப்பவர்கள் நாட்டின் எப்பாகத்திலாவது உணவு நிலையம் நடாத்திய அனுபவம் மற்றும் மருத்துவ சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.

13.உணவு நிலையங்களில் உணவினை கையாள்பவர்களும் மற்றும் அன்னதான மடங்களில் பணிபுரிபவர்களும் அனை வரும் மருத்துவச்சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

14. உணவு நிலையங்களிற்கான குடிநீர் பொதுச்சுகாதார பரிசோதகரினால் அனுமதிக்கப்பட்ட இடத்தில் இருந்து பெறப்பட வேண்டும்.

15. 10 ஆம் திருவிழா தொடக்கம் இறுதி 7 நாட்களும் நீர்ப்பாசன நிறுவனத்தின் பாலத்தின்மீதான நடைபாதை திறக்கப்படும்.

16. ஆலய வளாகத்தில் போதைப் பொருள் பாவனையில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

17.பச்சை குத்துதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

18. ஆலய வளாகத்தில் காவடிக்காக செதில் குத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் செதில் குத்தும் ஊசியினை 20 நிமிடங்கள் வரை கொதிநீரில் அவித்த பின்னரே அதனை பயன்படுத்த வேண்டும்.

19. ஆலய ஒலிபெருக்கி பாவனை தவிர வேறு ஒலிபெருக்கி பாவனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே தூக்குக் காவடி, கரகங்களுடன் வரும் ஒலி பெருக்கி மற்றும் ஒலி பெட்டிகளின் ஒலிகளை வீதித் தடைகளில் நிறுத்தி ஆலய வளாகத்திற்குள் நுழையும் படி தெரிவித்துக் கொள்கின்றோம்.

எனவே மேற்படி மகோற்சவ காலத்தில் ஆலயத்துக்கு வருகை தரும் சகல அடியவர்களும் மேற்படி நடைமுறைகளை பின்பற்றி மகோற்சவம் சிறப்பாக இடம்பெற ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

நன்றி

**ஆலய நிர்வாகம்**

(1607)

# இராசிபலன்

03.08.2024
ஆடி 18, சனிக்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 4.53 மணிவரை

புனர்பூசம் பிற்பகல் 1.40 மணிவரை
சுபநேரம்- 3.04-4.34 மணிவரை
இராகுகாலம்-9.04-10.34 மணிவரை

சந்திராஷ்டமம்
விசாகம், அனுசம்

வளவன்

**மேஷம்** பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசையுடன் செயற்படுவீர்கள், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படையும் நாள், விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்,போசன சுகமுண்டு.

**துலாம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்,பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மகரம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**ரிஷபம்** பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், உறவினர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள், போசன சுகமுண்டு, கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**சிம்மம்** காரிய அலைச்சல்கள் சற்று மனச்சோர்வு ஏற்படும், சுபகாரியச் செலவுகளில் தாரளம் காட்டுவீர்கள், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்** எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்** எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், தன்னம்பிக்கையுடன் செயற்படும் நாள் , விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்பபுண்டு.

**மிதுனம்** பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெற வாய்ப்புண்டு.

**கன்னி** மனதில் இனம் புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும், பெரியவர்களின் ஆதரவு கிடைக்கும், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, புதிய முயற்சிகளில் முன்னேற்றமுண்டு, ரோக பயமுண்டு.


**உழைப்பவர் கையில்தான் உலகம் இருக்கிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பிரதமர் மோடியின் இலங்கை விஜயம் ரத்து

## சர்வதேசங்களின் கவனத்தை ஈர்த்துள்ள விடயம்

**(கொழும்பு) இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயம் இரத்து செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.**



இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகப் புதுடில்லியில் உள்ள தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இலங்கைக் கடற்படையினரின் படகு மோதியதால் இந்திய மீனவர் படகொன்று கடலில் மூழ்கியதில் ஒருவர் பலியான சம்பவம் பதிவாகியிருந்தது.

இதனை அடுத்து டெல்லியில் உள்ள இலங்கை பதில் உயர்ஸ்தானிகர் இந்திய வெளியுறவு அமைச்சால் அழைக்கப்பட்டு இராஜ தந்திர ரீதியிலான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சூழ்நிலையில் பிரதமர் மோடியின் இலங்கை விஜயம் இரத்து செய்யப்பட்டுள்ளமை சர்வதேசக் கவனத்தை ஈர்த்துள்ளதாகக் கூறப்படுகிறது. (நி-6)

# லெபனான் செல்வதை தவிர்த்துக்கொள்ளுங்கள்

## இலங்கையர்களிற்கு வெளிவிவகார அமைச்சர் ஆலோசனை

(கொழும்பு)

இலங்கையர்கள் அடுத்த சில நாட்களிற்கு லெபனானிற்கு செல்லக்கூடாது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஹமாஸ் தலைவர் ஹிஸ்புல்லா தளபதி ஆகியோர் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் பதற்றநிலை உருவாகியுள்ள நிலையிலேயே இந்த அறி விப்பு வெளியாகியுள்ளது.

லெபானில் தற்போது 6000 இலங்கையர்கள் உள்ளனர் என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி மோதல்கள் பெரும் வன்முறையாக வெடித்தால் ஈரானில் உள்ள இலங்கையர்களை வெளியேற்றுவதற்கான திட்டம் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நிலைமையை அவதானித்து நடவடிக்கை எடுப்பதற்காக ஜனாதிபதி இரண்டு குழுக்களை நியமித்துள்ளார் என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபரிலேயே இவ்வாறான நிலைமைகளை எதிர்கொள்வதற்கான திட்டமொன்றை நாங்கள் வகுத்துள்ளோம்.அது குறித்து ஆராய்ந்துவருகின்றோம், உடனடி நடவடிக்கை எடுத்து மத்தியகிழக்கில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான திட்டம் தயாராகவுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# கோதுமை மா விலை குறைத்தால் பாணின் விலையை குறைக்கலாம்

## அகில இலங்கை பேக்கரிகள் சங்கம்

(கொழும்பு)

பாண் ஒன்றினை 130 ரூபாவிற்கு விற்பனை செய்வது நடைமுறைச் சாத்தியமற்றது என அகில இலங்கை பேக்கரிகள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

450 கிராம் பாண் ஒன்றின் விலை 130 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட வேண்டுமென நுகர்வோர் அதிகார சபை அண்மையில் அறிவித்திருந்தது.

தற்போது பாண் நியாயமான விலைக்கு விற்கப்படுகிறதா என நாடு முழுவதும் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. இதனால் பேக்கரி உரிமையாளர்கள் தேவையான எடையில் பாணை உற்பத்தி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாக அதன் தலைவர் தெரிவித்தார்.

கோதுமை மாவின் விலையை குறைக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அரசாங்கம் அழுத்தம் கொடுத்தால் பாணை 100 ரூபாவிற்கு விற்பனை செய்ய முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தருணத்தில் அரசாங்கம் செய்ய வேண்டியது பேக்கரி உரிமையாளர்களின் பின்னால் தாவாமல் கோதுமை மாவின் விலையை குறைப்பதே ஆகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# விளம்பரங்களில் நடிக்க பெண்களுக்கு தடை?

## சுகாதார அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி முதல், கைக்குழந்தைகள், சிறு குழந்தைகள், 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள் கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் முன்னிலைப்படுத்தப்பட்டு விளம்பரங்களை வெளியிட தடை விதிக்க தீர்மானித்துள்ளதாக, சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டு பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

உணவு சில நோய்களை குணப்படுத்தும் என்ற பிரசாரம் தவறானது என சுகாதார அமைச்சின் உணவு கட்டுப்பாட்டு பிரிவின் பிரதிநிதி பணிப்பாளர் தெரிவித்தார்.

ஒருவர் வருடத்திற்கு 150 கிலோவுக்கும் அதிகமான அரிசியை உண்பதாகவும் வாரத்திற்கு 2.8 கிலோ உண்பதாகவும் உருளைக் கிழங்கு, சோளம் போன்ற உணவுகளால் கார்போஹைட்ரேட்டின் அளவு அதிகரிப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி-6)


# கண்ணீர் அஞ்சலி

வலம்புரி பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்றுகின்ற செல்வி. பி.சியானி அவர்களின் அன்புத் தந்தை

அமரர். **பொன்னர் பிரமதேவன்**

( உரும்பிராய் )

அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



தோற்றம் 1960.10.21

மறைவு 2024.08.02

பிரிவுத்துயரில் பங்குகொள்ளும் வலம்புரிக் குடும்பம்

# நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சுரக்ஷா காப்புறுதி

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் சுரக்ஷா காப்புறுதி வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார்.

அத்தோடு நாடளாவிய ரீதி யிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களும் இந்த வேலைத்திட்டத்தின் மூலம் பயனடைய முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், சுரக்ஷா காப்புறுதி 4.5 மில்லியன் மாணவர்களுக்கு வழங்கப் பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். மேலும் இதனடிப்படையில் மூன்று வருடங்களுக்கு மாணவர்களுக்காக 7.1 மில்லியன் ரூபாய் நிதி அரசாங் கத்தினால் ஒதுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

லங்கா மஹால் (PVT) LTD
DHL
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு : 0091956156719
WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
உலகத்தின் எந்த நாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு
077 839 3974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசியில் உலோகங்கள் பரிசோதனையில் உறுதி!

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

**(கொழும்பு)**

**அரிசியில் காட்மியம், ஈயம் போன்ற உலோகங்கள் இருப்பது பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஆனந்த ஜயலால் தெரிவித்துள்ளார்.**

இதன் காரணமாக அதிகளவான சிறுநீரக நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

உணவு தொடர்பில் சமூகத்தில் நிலவும் தவறான கருத்துக்கள் தொடர்பில் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனை சுட்டிக்காட்டினார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், "நாளாந்தம் 200 கிராம் அரிசியை உணவாக மூன்று வேளை உட்கொள்வது பாதிப்பை ஏற்படுத்தும். நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், உடல் பருமன் மற்றும் பிற நோய்களை ஏற்படுத்தும்.

உணவு சில நோய்களை குணப்படுத்தும் என சமூக வலைதளங்களில் வரும் விளம்பரங்களை கண்டு ஏமாற வேண்டாம்.

ஒரு குறிப்பிட்ட நோயை உணவின் மூலம் குணப்படுத்த முடியும் என்று கூறினால் முறையான அறிவியல் ஆய்வு நடத்தி நாட்டின் முக்கிய உணவு அதிகாரியான சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் அனுமதி பெற வேண்டும்.

மேலும் ஊட்டச்சத்து, உடல் செயற்பாடு, ஆற்றல் போன்றவை உணவில் இருந்து பெறப்படுவதாகவும் நோய்களைக் குணப்படுத்த உணவல்ல மருந்தைப் பயன்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஒருவர் வாரத்திற்கு 2.8 கிலோ அரிசி, 32 கிலோ கோதுமை மா, 12 கிலோ ரொட்டிமா மற்றும் 24 கிலோ சீனி சாப்பிடுகிறார்.

இதனால் உடலில் காபோகைதரேட் அளவு அதிகரிக்கிறது எனவும் உணவைப் பன்முகப்படுத்த வேண்டும், இல்லை என்றால் ஊட்டச்சத்து குறைபாடு ஏற்படும்" என அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# எங்கள் பிள்ளைகளை காணும் வரை போராட்டம் ஓயாது

## முல்லையில் உறவுகள் கவனயீர்ப்பு

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே எங்கள் குழந்தைகளைத் தேடி 15 வருடங்களாகத் தெருத் தெருவாக சாப்பாடு, தண்ணீர் இல்லாமல், படுக்க இடமில்லாமல் எத்தனை மாதமாக அடி வாங்கி, பேச்சு வாங்கி இதுவரையிலும் இந்தப் போராட்டத்தை கைவிடவில்லை.

இனியும் எங்களுடைய உயிர் இருக்கும் வரை இந்தப் போராட்டத்தை கைவிடப் போவதில்லை. எங்களுக்கு மரண சான்றிதழோ, இரண்டு இலட்சமோ எதுவும் வேண்டாம்.

கடைசிக் காலம் நாங்கள் மறையும் வரை எங்களுடைய பிள்ளைகளைப் பார்க்காமல் நாங்கள் ஓயமாட்டோம்.

புலனாய்வுப் பிரிவினர், பொலிஸார், இராணுவம் யார் அச்சுறுத்தினாலும் நாங்கள் இந்த போராட்டத்தை நடத்தியே தீருவோம்.

இதற்கான முடிவினை சர்வதேசம் கவனத்தில் எடுத்து எங்களுடைய பிள்ளைகளை நாங்கள் இறக்க முன் எங்களுடைய கண்ணுக்கு முன்னால் நாங்கள் பார்ப்பதற்கு நல்லதொரு முடிவு தர வேண்டி நிற்கிறோம் என தெரிவித்தனர். (நி-6-299)

# மிருசுவில் பகுதியில் விபத்து-இருவர் படுகாயம்



(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் ஏ9 வீதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஒருவருடைய வாகனத்தில் சென்ற முன்னாள் நகரசபை உறுப்பினர் ஒருவரும் -கார் சாரதியுமே இவ்வாறு விபத்தில் சிக்கி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளனர்.

இதில் முன்னாள் நகரசபை உறுப்பினர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)

## கொள்ளை அறிக்கை வெளியிடல்

(யாழ்ப்பாணம்)

மக்கள் போராட்ட முன்னணியின் மக்கள் கொள்கை அறிக்கை வெளியிடல் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ்.நிம்மர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6)



வல்வெட்டித்துறை இமையாணன் அ.த.க வித்தியாலயத்தின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டல் நிகழ்வு கடந்த புதன்கிழமை பாடசாலை அதிபர் சிவலிங்கம் லிங்கனதாஸ் தலைமையில் நடைபெற்றது.

(படம்:மகாலிங்கம்)

## குரு பூஜையும் ஆடி அமாவாசையும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகள் வருடக் குரு பூஜையும் ஆடி அமாவாசைப் பூசையும் நாளை ஞாயிற்றுக் கிழமை ஸ்ரீ சிவகுருநாத குரு பீடம், மகாதேவ சுவாமிகள் ஆச்சிரம வேதாந்த மடத்தில் இடம்பெறவுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# வயநாடு நிலச்சரிவின் மீட்பு பணிகள் தீவிரம்
# 316 ஆக உயர்ந்துள்ள உயிரிழப்புக்கள்



(டில்லி)
இந்தியா. கேரளா வயநாட்டில் கடந்த செவ்வாய்க் கிழமையன்று பெய்த கன மழையால் ஏற்பட்ட மண் சரிவில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 316 ஆக உயர்ந்துள்ளது.

மண் சரிவில் புதையுண்டவர்களை மீட்கும் பணிகள் நான்காவது நாளாகவும் தொடர்கின்ற நிலையில், 3500 இற்கும் அதிகமானோர் மீட்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ மண்சரிவு ஏற்பட்ட மலைப் பகுதியை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புகைப்படமாக எடுத்து அது குறித்து தகவல்களை அறிவித்துள்ளது.

அதன்படி, மண்சரிவு சுமார் 86,000 சதுர அடி பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

மேலும் சிக்குண்டவர்களை தேடும் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

அனைத்து பகுதியும் சேறும், சகதியுமாக காணப்படுவதால் மீட்புப் பணிகளில் கடும் சிரமம் ஏற்பட்டு வருகின்ற நிலையில் இந்த ஸ்கேனர் உதவியுடன் சிக்குண்டவர்களை கண்டறிய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 1000 இற்கும் அதிகமானோர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாகவும் கேரளா அரசு தெரிவித்துள்ளதோடு, பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# சீனாவில், நிலச்சரிவு 30 பேர் உயிரிழப்பு



(பியாங்யாங்)
சீனாவின். ஹெங்யாங் பகுதியில் ஏற்பட்ட நிலச் சரிவில் சிக்குண்டு 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் தென் கிழக்குப் பகுதி முழுவதிலும் கேமி புயல் காரணமாக கன மழை பெய்து வருகிறது. தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கையும் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில். சீனாவின் ஹுனான் மாகாணத்தில் உள்ள ஹெங்யாங் நகரில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்குண்டு 15 பேர் உயிரிழந்துள்ளதுடன் , பலர் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் குறித்த பகுதியில் தற்போது மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.


நிலச்சரிவில் சிக்கி 35 பேர் காணாமல் போன நிலையில் மீட்புக் குழுவினர், அவர்களை தேடி வருகின்றனர் என்றும் மீட்பு நடவடிக்கைகள் குறித்த பகுதிகளில் இடம்பெற்று வருவதாகவும் சீனச் செய்திகள் தெரிவித்துள்ளன.

கேமி புயல் சீனாவை தாக்குவதற்கு முன்னர் பிலிப்பைன்ஸை தாக்கியதில் 34 பேர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(நி-6)

# வாழ்க்கைச் செலவு நெருக்கடி
# நைஜீரியாவில் வெடித்த போராட்டம்

(நைஜர்)
நைஜீரியாவில் வாழ்க்கை செலவு அதிகரித்துள்ள நிலையில் பெருமளவான இளைஞர்கள் தெருக்களில் குவிந்து தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

போராட்டகாரர்களை கலைப்பதற்காக பாதுகாப்பு படையினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசியுள்ளனர்.




அபுஜாவில் உள்ள ஒரு மைதானத்தில் போராட்டத்தை கட்டுப்படுத்த நீதிமன்றம் உத்தரவு வழங்கியதாக அறிய முடிகிறது.


நைஜீரிய பொலிஸ் அதிகாரிகள் ஜனாதிபதி வில்லாவிலிருந்து சில கிலோமீற்றர்கள் திரண்டிருந்த எதிர்ப்பாளர்களின் கூட்டத்தை கலைக்க கண்ணீர் புகை குண்டுகளை வீசுவதைக் காண முடிந்ததாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் மோதலால் பாதிக்கப்பட்ட வட கிழக்கில் பௌச்சி மற்றும் போர் னோ மாநிலங்களில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர் புகைகுண்டுகளை வீசினர்.

பாதுகாப்புப் படையினர் யாரையும் கைது செய்தார்களா என்பது உடனடியாகத் தெரியவில்லை. (நி-6)

# வணிக வளாகத்தில் பயங்கர தீ விபத்து 11 பேர் உயிரிழப்பு

## பிலிப்பைன்ஸில் சோகம்




(மணிலா)
பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவில் சீனாடவுன் மாவட்டத்தில் வணிக வளாகம் உள்ளது.

இந்த வணிக வளாக கட்டடத்தில் நேற்று காலை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இந்த கட்டடத்தின் கீழ் தளத்தில் உள்ள உணவகத்தில் பற்றிய தீ மளமளவென கட்டடத்தின் மேல் பகுதிக்கும் பரவியது

இந்த தீ விபத்துக் குறித்து தகவலறிந்த தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்த வந்த பற்றி எரிந்த தீயை அணைத்தனர்.

ஆனாலும் இந்த தீ விபத்தில் கட்டடத்தில் உள்ள 11 பேர் உயிரிழந்தனர். இந்த தீ விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணையை நடத்தி வருகின்றனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ள் தீவி
ததியும்
காணப்
ரிகளில்
டு வரு
இந்த
ன் சிக்
ண்டறிய
க்கப்பட்
தம் அதி
ன் மீட்
கேரளா
ாதோடு,
மேலும்
ம் கூறப்
ப்பிடித்த
(நி-6)

கடி
டம்

னோ
ாராட்
ிஸார்
களை
யினர்
ர்களா
தெரிய
(நி-6)
ன கட்ட
கும் பர
குறித்த
ணைப்புப்
த்திற்கு
எரிந்த
விபத்தில்
11 பேர்
ந்த தீ
குறித்து
ப்பதிவு
நடத்தி
(நி-6)

# பற்றி எரியும் மத்திய கிழக்கு
# போர் பதற்றம் உக்கிரம்!

(டெஹ்ரான்)

**ஈரான் நாட்டில் இருந்த ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே படுகொலை செய்யப்பட்டுள்ளது சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.**



இதற்கிடையே இந்த ஹனியே படுகொலைக்கு பின்னணியில் அமெரிக்கா இருப்பதாக ஈரான் குற்றஞ்சாட்டியுள்ளது.

மேலும், இதற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்றும் ஈரான் சூளுரைத்துள்ளது.

மத்திய கிழக்கு பகுதியில் கடந்த சில மாதங்களாக மீண்டும் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் நடத்திய நிலையில், அதற்கு இஸ்ரேல் கடுமையாக பதிலடி கொடுத்து வருகிறது.

இதனால் அங்கே முழுக்க முழுக்க பதற்றமான ஒரு சூழலே நிலவி வருகிறது. காசாவில் நடத்தும் தாக்குதலுக்கு சர்வதேச அளவில் எதிர்ப்பு வந்தாலும் கூட இஸ்ரேல் தாக்குதலை நிறுத்தவில்லை.

ஹமாஸை முழுமையாக அழிக்கும் வரை போரை நிறுத்தப்போவதில்லை என்பதில் இஸ்ரேல் உறுதியாக இருந்தது. இதனால் அங்கே மோதல் தொடர்ந்தது. இந்தச் சூழலில் தான் ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே டெஹ்ரானில் படுகொலை செய்யப்பட்டிருப்பதாக ஹமாஸ் அறிவித்தது. ஏற்கனவே அவர் மீது கடந்த 2004 முதல் பல முறை கொலை முயற்சித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அதில் எல்லாம் அவர் தப்பி இருந்தார். ஆனால், இந்த முறை அவர் மீதான தாக்குதலில் அவர் கொல்லப்பட்டு இருக்கிறார். ஈரான் நாட்டின் புதிய ஜனாதிபதியின் பதவியேற்பில் கலந்து கொள்ள இஸ்மாயில் ஈரான் தலைநகர் டெஹ்ரானுக்கு சென்றிருந்தார்.

அப்போது யாருமே எதிர்பார்க்காத வகையில் இஸ்ரேல் ஏவுகணை தாக்குதலை நடத்திய நிலையில் அதில் இஸ்மாயில் கொல்லப்பட்டுள்ளார். அவருடன் அவரது பாதுகாவலர்கள் இரண்டு பேரும் உயிரிழந்துள்ளனர். இதை ஹமாஸ் உறுதி செய்துள்ளது. இஸ்ரேலின் இந்தத் தாக்குதலை போரை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் என அஞ்சப்படுகிறது.

இதற்கிடையே இஸ்ரேலின் இந்தத் தாக்குதலுக்கு பின்னணியில் அமெரிக்கா இருப்பதாக தகவல் வெளியானது. அதாவது இவ்வளவு பெரிய தாக்குதலை அமெரிக்காவுக்கு தெரியாமல் அல்லது அமெரிக்காவின் ஒப்புதல் இல்லாமல் இஸ்ரேலால் நடத்தி இருக்க முடியாது என்பதே ஈரானின் குற்றச்சாட்டாக இருக்கிறது.

இந்த விவகாரம் குறித்து அமெரிக்காவின் வெளியுறவுத்துறை செயலாளர் ஆண்டனி பிளிங்கன் விளக்கமளித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், "இந்த சம்பவம் குறித்து எங்களுக்கு முன்கூட்டியே தெரியாது.

இதற்கும் அமெரிக்காவுக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை. இந்தத் தாக்குதல் மூலம் இஸ்ரேல் உலகிற்கு என்ன சொல்ல வருகிறது என எனக்கு தெரியாது. ஆனால், போர் நிறுத்தம் கட்டாயம் தேவைப்படுகிறது. அதன் முக்கியத்துவத்தை நான் உங்களுக்குச் சொல்ல முடியும்.

காசா மட்டுமின்றி, வடக்கு லெபனான் ஹிஸ்புல்லாவாக இருந்தாலும் சரி செங்கடலில் ஹவுதிகளாக இருந்தாலும் சரி, மோதல் வராமல் இருக்க எங்களால் முடிந்த அனைத்தையும் செய்து வருகிறோம்.

ஈரான், சிரியா, ஈராக் என எல்லா நாடுகளிலும் அதையே தான் செய்து வருகிறோம். மீண்டும் போர் அல்லது பதற்றம் ஏற்படாது என்பதை உறுதி செய்ய போர் நிறுத்தம் தேவை என்று அவர் தெரிவித்தார். (நி-6)

# தீவிரமடைந்து வரும் இஸ்ரேல்- ஹிஸ்புல்லா மோதல்


(டெஹ்ரான்)

ஹமாஸ் அமைப்பின் தலைவர் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் உயிரிழந்துள்ள நிலையில் இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பு தாக்குதல் நடத்தியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹமாஸ் அமைப்பின் தலைவரான இஸ்மாயில் ஹனியேவும் கடந்த 31 ஆம் திகதி ஈரான் தலைநகர் டெஹ்ரானில் இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டார்.


இதனையடுத்து லைபனானில் இருந்து இஸ்ரேல் மீது ஹிஜ்புல்லா அமைப்பு 20 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இவற்றில் 5 மட்டுமே இஸ்ரேல் பிராந்தியத்துக்குள் நுழைந்ததாகவும் இதனால் யாருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் இஸ்ரேல் தகவல்கள் தெரிவித்துள்ளன. (நி-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானங்களின் விலைகளை குறைக்குமாறு கோரிக்கை



(கொழும்பு)

மதுபான போத்தல் ஒன்றின் விலையை நூறு ரூபாவினால் குறைக்குமாறு மதுபான உற்பத்தியாளர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விலையேற்றம் காரணமாக மதுபாவனை நாற்பது வீதத்தால் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

மதுவரி திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற விசேட சந்திப்பின் போதே மதுவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எம்.ஜே. குணசிறி இந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், மதுபானத்தின் விலை அதிகரிப்பு காரணமாக பாவனையாளர்கள் சட்டவிரோத மதுபானத்தை பயன்படுத்துவதற்கான தூண்டுதல் அதிகரித்துள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

எத்தனோல் லீற்றர் ஒன்றின் விலை 600 முதல் 700 ரூபாய் வரை குறைவடைந்துள்ளதால் மதுபானத்தின் விலை குறையும் வாய்ப்பு உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விலையேற்றம் காரணமாக மதுபாவனை நாற்பது வீதத்தால் குறைந்துள்ளதாகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும், மதுபான உற்பத்தி பொருட்கள் மீது விதிக்கப்படும் கலால் வரி மற்றும் வரி காரணமாக விலையை குறைக்க முடியாதுள்ளதாக மதுபான உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 280 | 200-300 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 250 | 200 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 550 | 400-500 | 500 |
| தக்காளி | 250 | 300 | 350 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 200 | 150-200 | 200 |
| கோவா | 350 | 400 | 450 | 350 | 400 |
| கரட் | 300 | 450 | 400 | 400 | 500 |
| பூசணி | 180 | 160 | 200 | 150-20C | 150 |
| புடோல் | 160 | 150 | 150 | 150 | 200 |
| வாழைக்காய் | 150 | 240 | 200 | 250-300 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 450 | 400 | 250-500 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 220 | 200 |
| பாகற்காய் | 800 | 600 | 600 | 350 | 600 |
| வெண்டக்காய் | 150 | 150 | 200 | 250 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 160 | 200 | 100 | 240 |
| பயற்றங்காய் | 200 | 600 | 400 | 200-300 | 400 |
| லீக்ஸ் | 450 | 500 | 400 | 350 | 500 |
| பீற்றூட் | 400 | 400 | 280 | 450 | 400 |
| கறிமிளகாய் | 800 | 800 | 1000 | 400 | 1200 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 200 | 40-60 | 200 |
| போஞ்சி | 600 | 650 | 700 | 400 | 700 |
| கத்தரி தம்புள்ள | 200 | 200 | 280. | -- | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 60 | 50 | 100 |
| தேசிக்காய் | 600 | 600 | 700 | 500-600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 100 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 500 | 450 | 650 | -- | 700 |
| வெங்காயப்பூ | 400 | 120 | 400 | -- | 300 |
| முள்ளங்கி | 120 | 100 | 150 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 80 | 80 | 60 |

## இன்று ஒரு தகவல் 202



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பாட்டும் பரிசும்

அந்தக்காலத்து மன்னர்களுக்கெல்லாம் மிகவும் தாராள மனது சார் என்றார் ஒருவர். எப்படி சார் சொல்கின்றீர்கள் என்று கேட்டேன் அவரிடம். சும்மா ஒரு பாட்டு எழுதிக் கொண்டு போய் படித்துக் காட்டினால் கூட பொன்னும் பொருளுமாக வாரி கொடுத்திருக்கின்றார்கள் சார் என்றார். இப்போதும் கூட கவிதை எழுதுபவர்களுக்கு பொற்கிழி வழங்குகின்றார்கள். எல்லாம் செய்கின்றார்கள் என்றேன்.

எல்லாம் செய்கின்றார்கள் சரி. ஆனால் எனக்கு யாரும் செய்யமாட்டேன் என்கின்றார்களே. என்று சொல்லி மிகவும் வருத்தப்பட்டார் அவர். கவலைப்படாதீர்கள் உங்களுக்கு ஒரு காலம் வரும் என்று அவருக்கு ஆறுதல் சொன்னேன். அவரை உட்கார வைத்து எனக்குத் தெரிந்த பழைய கதை ஒன்றைச் சொன்னேன்.

அந்தக் காலத்தில் ஒரு ராஜா இருந்தார். அரசு கட்டிலிலே உட்காந்திருந்தார். அந்த சமயத்திலே ஒரு கவிஞர் அவரைத் தேடி வந்தார். மன்னரைப் புகழ்ந்து பாட ஆரம்பித்தார். ஒரே ஒரு பாட்டுத்தான் பாடினார். அதைக் கேட்ட உடனே அந்த ராஜா டக் என்று எழுந்தார். தெற்கு முகமாக திரும்பி உட்கார்ந்து கொண்டார். அதைப் பார்த்த உடனே பாட்டுப்பாடிய கவிஞருக்கு கொஞ்சம் வருத்தமாகப் போய்விட்டது.

என்ன இது என் பாட்டைக்கேட்ட உடனே கிழக்கு முகமாக உட்கார்ந்திருந்த ராஜா முகத்தைத் திருப்பிக் கொண்டு தெற்கே பார்த்து உட்கார்ந்து விட்டாரே என்று நினைத்தார். இருந்தாலும் அந்த கவிஞர் விடவில்லை. இவரும் சுற்றிக் கொண்டு போய் மறுபடியும் அவர் முன்னால் நின்றார். அங்கே போய் நின்று இன்னொரு பாட்டை எடுத்து விட்டார். ராஜா பார்த்தார். பேசாமல் மறுபடியும் மேற்குப் முகமாக திரும்பி உட்கார்ந்தார்.

இந்த புலவர் அப்போதும் விடுகின்ற மாதிரி இல்லை. மறுபடியும் சுற்றிக் கொண்டு அவர் முன்னாடி போய் நின்றார். இன்னொரு பாட்டைப் பாடினார். இதற்காவது ஏதாவது பரிசு கிடைக்காத என்கின்ற நினைப்பிலே. ராஜா பார்த்தார்.பேசாமல் எழுந்து உள்ளே போய்விட்டார். சபை கலைந்து விட்டது. ராஜாவே எழுந்து உள்ளே போனதற்குப் பின்னர் மற்றவர்களுக்கு அங்கே என்ன வேலை. எல்லோரும் போய்விட்டார்கள்.

புலவர் மட்டும் நின்று கொண்டிருந்தார். அவருக்கு மிகவும் ஏமாற்றமாக போய் விட்டது. முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டே அரண்மனையை விட்டு வெளியே வந்தார். அந்த சமயத்திலே எங்கேயோ போயிருந்த அமைச்சர் உள்ளே வந்து கொண்டிருந்தார். வாசலிலே புலவரைப் பார்த்தார். என்ன கவிஞரே எனக்கு கொஞ்சம் வெளியிலே வேலை இருந்தது. அதனாலே அரச சபைக்கு இன்றைக்கு வர முடியவில்லை. உங்கள் பாட்டையும் கேட்க முடியவில்லை. அது சரி ராஜா என்ன பரிசு கொடுத்தார் என்று கேட்டார்.

அந்த வயித்தெரிச்சலை ஏன் கேட்கின்றீர்கள் என்று ஆரம்பித்து அரண்மனையிலே நடந்ததை அப்படியே சொல்லி முடித்தார் புலவர். அமைச்சர் அதை கவனமாகக் கேட்டுக் கொண்டார். சரி புலவரே அரசர் உமக்கு கொடுத்ததை இப்போது நான் விலை கொடுத்து வாங்கிக் கொள்கின்றேன். இந்தாருங்கள் ஆயிரம் பொன் என்றார். புலவருக்கு ஒன்றும் புரியவில்லை. இந்த அமைச்சருக்கு புத்திசுவாதீனம் சரி இல்லை போல் இருக்கின்றது என்று முடிவு செய்து விட்டார்.

சரி வருவதை எதற்கு விடுவோம் என்று நினைத்து அவர் ஆயிரம் பொன்னை வாங்கிக்கொண்டு வேகமாக அந்த இடத்தை விட்டுப் போனார். அவருக்கு புத்தி தெளிந்து கொடுத்ததை திரும்ப வாங்கிவிட்டால் என்ன செய்வது என்று பயம். இது இப்படி இருக்க அந்தப்புரத்திலே ராஜா சோர்வாக இருந்தார். ராணி வந்து என்ன விடயம் என்று விசாரித்தார். அதற்கு ராஜா சொன்னார்.

இன்றைக்கு அரச சபைக்கு ஒரு பெரிய கவிஞர் வந்தார். நான் கிழக்கு முகமாக உட்கார்திருந்தேன். என்னைப் பார்த்து ஒரு கவி பாடினார். மிகவும் உயர்ந்த கவிதையாக இருந்தது. அதனாலே கிழக்கு திசையிலே உள்ள நமது சாம்ராஜியம் முழுவதையும் அவருக்கு பரிசாகக் கொடுத்து விட்டேன் அவருக்கு என்று. ஆனா ராஜியத்தை இனி நான் பார்க்க கூடாது என்று நினைத்து தெற்கே திரும்பி உட்கார்ந்தேன். அங்கேயும் வந்து பாடினார். அதையும் கொடுத்து விட்டேன். இப்படி எல்லா ராஜியத்தையும் அவருக்கு தானம் வழங்கி விட்டேன். இனிமேல் நாங்கள் இங்கே இருப்பது சரியில்லை. புறப்படு தபோவனத்திற்கு போய்விடுவோம் என்றார் ராஜா.

ராணியும் புறப்பட ஆரம்பித்தார்கள். அந்த சமயத்திலே அமைச்சர் அங்கு வந்தார். அரசே இந்த சாம்ராஜிய பொறுப்பு உங்களை விட்டு போய்விடவில்லை. நீங்கள் அந்த புலவருக்கு கொடுத்ததை நான் ஆயிரம் பொன் கொடுத்து நமக்கே திரும்ப வாங்கி விட்டேன். என்று விவரத்தைச் சொன்னார். அதன்பின் இந்த ராஜா மறுபடியும் சிறப்பாக ஆட்சி செய்தார். என்று இந்த கதையை உன் முனனால் உட்காந்திருக்கின்ற இந்த கால கவிஞரிடம் சொன்னேன்.

இதைக் கேட்டவுடனே அவர் துள்ளிக்குதித்தார். இப்போது தான் சார் எனக்கும் விவரம் புரிகின்றது. என்ன விடயம் என்று விசாரித்தேன். அதற்கு அவர். சார் நான் நேற்று ஒரு சினிமா இசையமைப்பாளரிடம் போய் நான் எழுதிய பாட்டை படித்துக் காட்டினேன். அவரும் இப்படித் தான் சார் முதலிலே கிழக்கு முகமாக உட்கார்ந்து ஆர்மோனியம் வாசித்தார். என் பாட்டைக் கேட்டவுடனே மேற்கு முகமாக திரும்பி உட்கார்ந்தார். இதற்கு என்ன அர்த்தமாக இருக்கும் என்றார்.

அதற்கு என்ன அர்த்தம் என்று நானே இந்த இசையமைப்பாளரிடம் கேட்டுச் சொல்கின்றேன். கவலைப்படாதீர்கள் என்று சொல்லிவிட்டு நானே புறப்பட்டு போனேன். அந்த இசையமைப்பாளரை பார்த்தேன். ஆர்மோனியமும் கையுமாக உட்காந்திருந்தார். சார் உங்களிடம் அந்தக் கவிஞர் வந்து தன்னுடைய பாட்டைப் படித்து காட்டியபோது நீங்கள் பின்புறம் முகத்தை திருப்பிக் கொண்டு உட்காந்திருந்தீர்களாமே. அதற்கு என்ன சார் அர்த்தம் என்றேன். அவர் கோபமாக என்னை முறைத்துப் பார்த்து விட்டு அந்த ஆள் முகத்திலே மறுபடியும் நான் முழிப்பதற்கு ஆசைப்படவில்லை என்று அர்த்தம் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 06. கனகரத்தினம் வீதி 1ஆம் ஒழுங்கை, 22ஆம் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சதாசிவம் பெண் நாகம்மா என்ற பெயரில் யாழ் மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் சுப்பிரமணியம் சதாசிவமும் பெண் நாகம்மாவும் 1951.09.17 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கந்தையா தில்லையம்பலம் முகதாவில் 97ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் சிவக்கொழுந்து தம்பித்துரை பெண் சரஸ்வதியம்மா என்பவரிற்கு சீதனமாக வழங்கியுள்ளனர்.

பின்னர் குறித்த ஆதனத்தை சிவக்கொழுந்து தம்பித்துரையும் பெண் சரஸ்வதி அம்மாவும் 1965.04.21 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் செல்வநாயகராசா மகாதேவா முகதாவில் 3652 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் அம்பலவாணர் சின்னத்துரைக்கும் பெண் செல்லமம்மா வுக்கும் அறுதியாக விற்றுள்ளனர்.

குறித்த ஆதனத்தை அம்பலவி அல்லது அம்பலவாணர் சின்னத்துரை 1976.06.06 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் செல்வநாயகராஜா மகாதேவா முகதாவில் 5734 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் அம்பலவாணர் சின்னத்துரை பெண் செல்ல ம்மாவுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பின்னர் குறித்த ஆதனத்தை அம்பலவி அல்லது அம்பலவாணர் சின்னத்துரை கைம்பெண் செல்லம்மா 1977.11.14 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் செல்வநாயகராஜா மகாதேவா முகதாவில் 5932 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய கட்டுப்பாட்டு அறுதி உறுதி மூலம் பொன்னு இரத்தினம் பெண் அன்னம்மாவுக்கு கட்டுப்பாட்டுக்கமைவாக அறுதியாக விற்றுள்ளார்.

குறித்த ஆதனத்தை பொன்னு இரத்தினமும் பெண் அன்னம்மாவும் 1980.03.16 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் செல்வ நாயகராஜா மகாதேவா முகதாவில் 6350 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் அம்பலவி அல்லது அம்பலவாணர் சின்னத்துரை கைம்பெண் செல்லம்மாவுக்கு அறுதியாக விற்றுள்ளார்.

குறித்த ஆதனத்தை பெருமாள்பிள்ளை ராஜ்குமார் 12.08.2023 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு புஸ்பரட்ணம் அபிதன் முகதாவில் 289 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் ஜதீஸ்வரன் அரிஹரனுக்கு தனது பங்கான சொரியலாக அரைவாசிப்பங்கினை அறுதியாக விற்றுள்ளார். மேற்குறித்த உறுதியில் "எனது தந்தையின் தாயாரான காலஞ்சென்ற அம்பலவாணர் சின்னத்துரை கைம்பெண் செல்லம்மாவின் பெயரில் 1976ஆம் ஆண்டு ஆனி மாதம் 06ஆம் திகதி நொத்தாரிசு சுப்பிரமணியம் செல்வநாயகராஜா மகாதேவா முகதாவில் 6350ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதிப்படி சொந்தமாக இருந்து அவர் மரண சாதனம் ஏதும் நிறைவேற்றாமலும் நிர்வகிக்கப்பட வேண்டிய பெறுமதிக்கும் குறைவான பெறுமதியுடைய சொத்துக்களையும் விட்டுக் காலஞ்செல்ல அவரிற்குப் பிள்ளைகளான பெருமாள்பிள்ளை, பரமேஸ்வரி, சரஸ்வதி ஆகியவர்களில் அவரது இரு பெண் பிள்ளைகளான பரமேஸ்வரி. சரஸ்வதி என்பவர்களிற்கு சீதனம் அளிக்கப்பட்டமையால் அவர்களினை தவிர்த்து சின்னத்துரை கைம்பெண் செல்லம்மாவின் ஒரே ஆண் வாரிசாகிய எனது தந்தையான காலஞ்சென்ற சின்னத்துரை பெருமாள் பிள்ளையினை வந்தடைந்ததென்றும் அவர் மரண சாதனம் ஏதும் நிறைவேற்றாமலும் நிர்வகிக்கப்பட வேண்டிய பெறுமதிக்கும் குறைவான பெறுமதியுடைய சொத்துக்களையும் விட்டுக் காலஞ்செல்ல அவரது பிள்ளைகளான யதீஸ்வரன், நான், வாசுகி, வாமதி ஆகியவர்களில் சீதனமளிக்கப்பட்ட வாசுகி மற்றும் வாமதியினை தவிர்த்து என்னையும் எனது சகோதரனையும் வந்தடைந்த வழியுரிமைப்படி குறித்த ஆதனத்தில் சொரியல் அரைவாசி வழியுரிமைப்படி என்னை வந்தடைந்த சொந்தமும் ஆட்சியுமுடையதாகும்..." என பெருமாள்பிள்ளை ராஜ்குமாரினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை ஜதீஸ்வரன் அரிஹரனும் பெண் லக்ஷாயினியும் 2024.05.23 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு பசுபதி ஜங்கரன் முகதாவில் 86 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் அமல் அன்ரனிக்கு அறுதியாக விற்றுள்ளார். குறித்த உறுதியில் இதற்கு முன்பந்தியில் குறிப்பிட்டவாறு இவ்வுறுதியிலும் ".... சின்னத்துரை பெருமாள்பிள்ளையினை வந்தடைந்ததென்றும் அவர் மரண சாதனம் ஏதும் நிறைவேற்றாமலும் நிர்வகிக்கப்பட வேண்டிய பெறுமதிக்கும் குறைவான பெறுமதியுடைய சொத்துக்களையும் விட்டுக் காலஞ்செல்ல அவரது பிள்ளைகளான ராஜ்குமார், எனது தந்தை ஜதீஸ்வரன், வாசுகி, வாமதி ஆகியோரில் சீதனமளிக்கப்பட்ட வாசுகி, வாமதி ஆகியோரைத் தவிர்த்து ராஜ்குமார் மற்றும் எனது தந்தை ஜதீஸ்வரன் ஆகியோரை வந்தடைந்த சொரியல் அரையரைவாசி சொந்தமும் ஆட்சியுமாய் இருந்து எமது சிறியதந்தை ராஜ்குமார் தனது சொரியல் அரைவாசியை ஏற்கனவே அறுதி விற்றிருந்த நிலையில் மிகுதி சொரியல் அரைவாசி எனது தந்தை பெருமாள்பிள்ளை ஜதீஸ்வரனை வந்தடைந்து அவர் மரணசாதனம் எதுவும் நிறைவேற்றாமலும் நிர்வகிக்கப்படவேண்டிய பெறுமதிக்கும் குறைவான பெறுமதியுடைய சொத்துக்களை விட்டிறக்க அவரது ஒரே வாரிசான ஜதீஸ்வரன் அரிஹரனை வழியுரிமையாக வந்தடைந்த மிகுதி சொரியல் அரைவாசிப்பங்கும் சொந்தமும் ஆட்சியுமாகும்..." என வெளிப்படுத்தியுள்ளனர்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, சிவியாதெரு இறை, நல்லூர் பிரதேச செயலகப்பிரிவு, யாழ்ப்பாணம் மாநகரசபை, J/96 கிராம உத்தியோகத்தர் பிரிவு,
"செம்மணத்தியன் புலம்" நிலப்பரப்பு 3 குழி 15 இதில் ஏற்கனவே கொடுபட்ட நிலப்பரப்பு 2 நீக்கி மிகுதி நிலப்பரப்பு 1 குழி 15 இது 2023.05.08ஆம் திகதி உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் கே.தியாகராஜா அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 310ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு ஒன்று குழி பதினான்கு தசம் பூச்சியம் மூன்று (நில.பர 1. குழி 14.03) இதில் சொரியலாய் அரைவாசியும் (இதன் பதிவு யாழ்ப்பாணம்) மிகுதி சொரியல் அரைவாசியும் (யாழ்ப்பாணம் )இரண்டும் சேர்த்து முழுவதும். இந்த நிலப்பரப்பு ஒன்று குழி பதினான்கு தசம் பூச்சியம் மூன்று (நில.பர 1 குழி 14.03) இதற்கு குறித்த 310ஆம் இலக்க நிலஅளவைப் படத்தின்படி எல்லைகள்

கிழக்கு : சுப்பையா சாந்தநாதனும் பெண் குணபூரணியினதும் அருள்ராஜ் சனுஜாவின் ஆதனங்கள்
வடக்கு : கனகரத்தினம் முதலாம் வீதியும் அருள்ராஜ் சனுஜாவின் ஆதனமும்
மேற்கு : ரவிச்சந்திரன் விஜயரஞ்சினியினதும் கணபதிப்பிள்ளை விஜயகுமாரினதும் ஆதனங்கள்
தெற்கு : வேலேந்திரன் ரங்கதேவியினது ஆதனம்
இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்

தற்போது அமல் அன்ரனி இவ்வாதனத்தை தனது பெயரினை எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு/ முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அமல் அன்ரனி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித் துக்கொள்கின்றேன்.

**ஆணையாளர்,மாநகரசபை,யாழ்ப்பாணம்.**

# செபஸ்தியார் வீதி பாலம் புனரமைப்பு



(அக்கராயன்)

கிளிநொச்சி பாரதிபுரம், கிருஷ்ண புரம்,மலையாள புரம் உள்ளிட்ட கிராமங் களுக்கு செல்லும் பிரதான வீதியான செபஸ்தியார் புர வீதி பாலத்தின் கட்டுமானப் பணிகள் துரித கதியில் முன் னெடுப்பு.

குறித்த பாலம் முன்னர் பாவனைக்காக கையளிக்கப் பட்ட நிலையில் பாலம் உடை ந்து விழுந்ததில் ஒருவர் காய மடைந்ததுடன் போக்குவரத் தும் தடைப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (நி-6-315)

# ஓராண்டு கடந்த பொன்னாவெளி போராட்டம்

(அக்கராயன்)

கிளிநொச்சி, பூநகரி பொன் னாவெளி மக்கள் சுண் ணக் கல் அகழ்வுக்கு எதிராக போராட்டம் தொடங்கி நேற்று முன்தினம் ஓர் ஆண்டு நிறைவு பெற்றுள்ளது

பொன்னாவெளி சுண் ணக் கல் அகழ்வுக்கு எதிரான போராட்டத்தின் (365ஆவது நாள்) ஒரு வருடம் பூர்த்தியா கிய நிலையில் ஆர்ப்பாட்ட மையத்தில் ஒன்று கூடிய மக் கள் தாங்கள் சுண்ணக்கல் அகழ்வுக்கு அனுமதிக்கப் போவ தில்லையெனவும் பொன்னா வெளியிலிருந்து டோக் கியோ நிறுவனம் வெளியேறும் வரை போராட்டத்தை கைவி டுவதில் லையெனவும் தெரி வித்தனர்.

அதற்கிணங்க அனைத்து மக்கள் ஒன்றியத் தலைவர் வ. சிறிபாஸ்கரன் எமது கிராமங் களின் வளங்களை அழிவிலி ருந்து பாதுகாப்பது ஒவ்வொ ருரின் உரிமையே. ஆகவே மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பேரழிவை ஏற்படுத் தும் சுண்ணக்கல் அகழ்வை தடுத்து டோக்கியோ நிறுவ னத்தை வெளியேற்றும் வரை தொடர்ந்து போராடுவோம். என தெரிவித்தார். (நி-6-350)



**கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயல கத்திற்குட்பட்ட தினேஸ் முன்பள்ளி, வளர்பிறை முன்பள்ளி, உதயதாரகை முன்பள்ளி மற்றும் அறத்தி நகர் முன்பள்ளி என நான்கு முன்பள்ளிகள் இணைந்து நடத்திய செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா கச்சார்வெளி செல் வபுரம் தினேஸ் முன்பள்ளி விளை யாட்டு மைதானத்தில் கடந்த செவ் வாய்க் கிழமை நடைபெற்றது. (படம்- தேவானந்தன்)**

# பொன்சேகா - ஜூலிசங் திடீர் சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகாவுக்கும் இலங்கைக்கானஅமெரிக்க தூதர் ஜூலி சங்கிற்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று இடம் பெற்றது.

குறித்த சந்திப்பு தொடர்பில் அமெரிக்க தூதர் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

(நி-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 548





அனுமதி கொடுத்தது மட்டுமா? அவ்வப்போது அந்தப் புத்தர் கோயிலுக்கு நிவந்தங்களும் இறையிலி நிலங்களும் அளித்து உதவினார்கள். (இந்தக் கதை நடந்த காலத்திற்குப் பிற் காலத்தில் இராஜராஜ சோழன் நாகைப்பட்டினம் சூடா மணி விஹாரத்துக்கு ஆனை மங்கலம் கிராமத்தையும் அதைச் சார்ந்த பல ஊர் களையும் முற்றூட்டாக அதாவது எந்தவிதமான வரியும் விதிக்கப்படாத இறையிலி நிலமாகத் தானம் அளித்தான் இந்த நில தானத்தை இராஜராஜனுடைய குமாரன், சரித்திரப் புகழ் பெற்ற இராஜேந்திர சோழன் செப்பேடுகளில் எழுதுவித்து உறுதிப்படுத்தினான். இவை தாம் ஆனைமங்கலச் செப்பேடுகள் என்று கூறப்படுகின்றன. மொத்தம் இருபத்தொரு செப்பேட்டு இதழ்கள். ஒவ்வொன்றும் 14 அங்குல நீளமும் 5 அங்குல அகலமும் உள்ளனவாய் ஒரு பெரிய செப்பு வளையத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இச் செப்பேடுகள் சமீப காலத்தில் கப்பல் ஏறிக் கடல் கடந்து ஐரோப்பாவில் ஹாலந்து தேசத்தில் உள்ள லெயிடன் என்னும் நகரத்தின் காட்சி சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையினால் இச்செப்பேடுகளை 'லெயிடன் சாஸனம்' என்றும் சில சரித்திர ஆராய்ச்சியாளர் குறிப்பிடுவதுண்டு.)

விஜயாலய சோழரின் காலத்திலிருந்து சோழ மன்னர்கள் சிவபக்தியில் திளைத்தவர்களாயிருந்தனர். ஆதித்த சோழரும், பராந்தக சோழரும், கண்டராதித்தரும் சைவப் பற்று மிக்கவர்கள். பற்பல சிவலாயத் திருப்பணிகள் செய்வித்தார்கள். எனினும் அவர்கள் பிற மதங்களைத் துவேஷிக்கவில்லை. தங்கள் இராஜ்யத்தில் வாழும் பிரஜைகள் எந்தெந்த மத்தைச் சேர்ந்தவர்களாயினும் அவர்களையும் அவர்களுடைய மதங்களையும் நடுநிலைமை தவறாமல் பராமரித்தார்கள். சுந்தர சோழ சக்கரவர்த்தி தமது முன்னோர்களைக் காட்டிலும் சில படிகள் முன் சென்றார். புத்தப் பள்ளிகளுக்கு விசேஷச் சலுகைகள் அளித்தார். இதனால் சோழ சாம்ராஜ்யத்தில் அச்சமயம் வாழ்ந்திருந்த பௌத்தர்கள் அனைவரும் மிக்க உற்சாகம் கொண்டிருந்தார்கள். இலங்கையில் அருள்மொழிவர்மர் இடிந்து போன புத்த விஹாரங்களைப் புதுப்பிக்கும்படி ஏற்பாடு செய்தது அவர்களுடைய உற்சாகத்தை மேலும் அதிகமாக்கியிருந்தது.

அப்படியெல்லாமிருக்க, இன்று அந்தப் பெயர் பெற்ற சூடாமணி விஹாரத்தில் நேர்ந்த குழப்பத்துக்குக் காரணம் என்ன? பிக்குக்கள் நிலை கொள்ளாமல் அங்குமிங்கும் பரபரப்பாக ஏன் ஓடிக் கொண்டிருக்கிறார்கள்? சூடாமணி விஹாரத்தின் வாசற்புரத்தில் என்ன அவ்வளவு இரைச்சலும் கூச்சலும்? நல்லது நாமும் சேந்தன் அமுதனைப் பின்பற்றிச் சென்று பார்ப்போம்.

சேந்தன் அமுதனும், மற்ற இருவரும் கால்வாயின் வழியாகப் படகைச் செலுத்திக் கொண்டு சூடாமணி விஹாரத்தின் உட்பகுதிக்கே வந்து விட்டதாகச் சொன்னோம். அங்கே ஒருவரையும் காணாமையால் சேந்தன் அமுதன் தட்டுத்தடுமாறி வழி தேடிக் கொண்டு, விஹாரத்தின் வாசற் பக்கம் போய்ச் சேர்ந்தான்.

அங்கேதான் பொதுமக்கள் வந்து வழிபடுவதற்குரிய புத்தர் பெருமானின் சைத்யம் என்னும் கோயில் இருந்தது. பக்தர்கள் பலர் அந்தக் காலை நேரத்தில் தாமரை மலர்களும் செண்பகப் பூக்களும், மற்ற பூஜைத் திரவியங்களும் நிறைந்த தட்டுக்களை ஏந்திக் கொண்டு வந்திருந்தார்கள்.

ஆனால் வந்த காரியத்தை அவர்கள் மறந்து விட்டதாகத் தோன்றியது. சைத்யத்தில் ஏறுவதற்குரிய படிகளில் புத்த பிக்குக்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களை நோக்கிக் கீழே நின்றவன் ஒருவன் ஏதோ சொல்லிக் கொண்டிருப்பதைச் சேந்தன் அமுதன் கண்டான்.


பிக்குக்கள் சிலருடைய கண்களில் கண்ணீர் ததும்பி நிற்பதையும் பார்த்தான். கீழே நின்ற பக்தர்களில் பலர் வழக்கப்படி "சாது! சாது!" என்று கோஷிப்பதற்குப் பதிலாக, "ஆஹா!", "அடாடா!" "ஐயோ!" என்று அங்கலாய்த்துக் கொண்டிருப்பதையும் கவனித்தான்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அலுத்துக்கொண்ட முயல்கள்



தலை தெறிக்க ஒரு முயல் காட்டுக்குள் ஓடி வர பின்னால் ஏதோ ஒரு மிருகம் விரட்டுவது போல மரம், செடி, கொடிகள் ஆட முயல் ஒரு இடத்தில் நின்று அதன் கூட்டத்தை அழைக்கிறது. உயிரை கையில் பிடிச்சிட்டு ஓடி வந்திருக்கேன். என்னால் இப்புடி பயந்தெல்லாம் வாழ முடியாது என கத்துகிறது.

முயல் இப்படி கத்தி கூச்சலிடுவதை கேட்ட மொத்த முயல் கூட்டமும் பதறிப்போய் வெளியில் வந்தன. ஓடி வந்த முயல் கூச்சல் இட்டு கொண்டிருக்கும் போதே இன்னொரு முயலும் தலை தெறிக்க ஓடி வர அதன் கழுத்து மற்றும் கால்களில் ரத்தம் கொட்டியது.

அதற்கு மருந்து கொண்டு வந்து கொடுப்பதற்குள் அது இறந்தும் போனது. இதை பார்த்து கொண்டிருந்த தலைவன் இதற்கு ஒரு முடிவு கட்ட [illegible]டும் என்ன செய்யலாம் என தனது கூட்டத்தை பார்த்து கேட்டது. ஆளுக்கொரு யோசனை சொல்ல, எதுவும் தலைவருக்கு சரியாக தோன்றவில்லை.

முதலில் ஓடி வந்த முயல் இதெல்லாம் சரியாக வராது. நாம் இருந்தால் தானே இவர்கள் நம்மை கொல்ல துடிப்பார்கள்.

நாமும் உயிரை [illegible] வேண்டும் என சொல்ல மத்த முயல்களும் ஆமாம் நாம் என் வாழ வேண்டும், மற்றவர்களுக்கு இரையாக வேண்டும். தினம் தினம் உயிருக்காக போராட வேண்டும் இதற்கு நாம் அணைவரும் இறப்பதே சிறந்த வழி என ஒன்றாக முடிவெடுக்க, தலைவரும் சரி என ஏற்று கொள்கிறார்.

சரி அப்போ நாளை காலை எல்லோரும் ஒன்றாக சேர்ந்து அருகில் இருக்கும் குளத்தில் விழுந்து இறக்கலாம் என முடிவு செய்து, ஒரு கூட்டமே கிளம்பியது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை என்னும் நாடகத்தில், விதி மற்றும் வாய்ப்புகள் ஆகிய இரண்டுமே அடங்கியுள்ளது.
- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சம்பந்தர் இழைத்த துரோகத்தை எவரும் செய்து விடாதீர்கள்

தமிழ் மக்களுக்கு சிங்களப் பேரினவாதம் இழைத்த கொடுமைகளையும் அநீதிகளையும் நாம் பட்டியல்படுத்துகின்றோமே தவிர, நம்மவர்கள் நம் இனத்துக்கு இழைத்த துரோகத்தை நாம் பட்டியல்படுத்தவும் அதை நினைவுபடுத்தவும் தவறிவருகின்றோம்.

அந்தவகையில், வன்னி யுத்தத்துக்கு பின்னர் தமிழ் மக்களுக்கு மிகப்பெரும் துரோகத்தனத்தை இழைத்தவர் இரா.சம்பந்தர் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இரா.சம்பந்தர் இருந்தபோது ஆளுந்தரப்புக்கு ஆதரவாகச் செயற்பட்டார். அதிலும் குறிப்பாக மகிந்த ராஜபக்ஷவுக்கு அவர் விசுவாசியாக இருந்தார். அதற்காக அவருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் அதனுடன் சேர்ந்த சலுகைகளும் வழங்கப்பட்டன.

தமிழ்த் தலைவர்களில் அ.அமிர்தலிங்கத்துக்கு அடுத்த படியாக எதிர்க்கட்சித் தலைவராகத் தானே இருந்ததாகப் பெருமை கொள்ளும் பொருட்டு; ஒட்டுமொத்தத் தமிழ் இனத்துக்கும் இரா.சம்பந்தர் துரோகம் இழைத்தார் என்பது நிறுதிட்டமான உண்மை.

அதுதவிர, தமிழ் அரசியல் இத்துணை தூரம் பிரிந்தும் சரிந்தும் போவதற்கும் அவரே மூலகாரணர்.

இதையும் கடந்து இன்று அரசியலில் ஓர் ஆன தமிழ்த் தலைமை இல்லாமல் போகின்ற அளவுக்கு சம்பந்தர் செய்த கொடுமைகளை வேறு எந்தத் தமிழ்த் தலைவர்களும் செய்யவில்லை.

இதை நாம் கூறும்போது, இரா.சம்பந்தர் இல்லாதபோது இவ்வாறு கூறுவது நியாயமா என நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

இங்குதான் ஓர் உண்மையை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதாவது தமிழ் மக்களுக்கு சம்பந்தர் செய்த துரோகத்தனம் காரணமாகவே அவரின் மறைவு தொடர்பில் தமிழ் மக்கள் எந்தப் பிரதிபலிப்பும் இல்லாமல் இருந்தனர்.

தவிர, அவரது உடலை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வருவதை தமிழ் மக்கள் விரும்பியிருக்கவில்லை.

ஏதோ அவரிடம் உதவி பெற்றவர்கள், அவரால் அரசியலில் பிரவேசித்தவர்கள் தங்கள் சுயநன்றிக்காக அவரது உடலை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வந்தனர்.

மற்றும்படி ஒரு தமிழ் அரசியல் தலைவரின் இறுதி நிகழ்வுகள் இப்படியா? நடக்க வேண்டும் என்பதை சமகாலத்து தமிழ் அரசியல்வாதிகள் விளங்கிக் கொள்வர்.

ஆக, இங்கு சம்பந்தர் இழைத்த அநீதிகளை – துரோகத்தனங்களை அவர் இல்லாதபோது உரைப்பது அவரை நோகடிப்பதற்காகவல்ல.

மாறாக, சமகாலத்தில் இருக்கக்கூடிய தமிழ் அரசியல் தலைவர்கள், சம்பந்தர் இழைத்த அநியாயத்தை இழைத்துவிடக் கூடாது என்பதற்காகவே இங்கு உரைத்தோம்.

ஆகையால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சொந்த நலன்களைப் புறந்தள்ளிவிட்டு, தமிழ் இனத்தின் நலனை முன்னிறுத்தி தமிழ் அரசியல் தரப்புகள் செயலாற்ற வேண்டும்.

# கீரிமலையில் நடைபெறவுள்ள ஆடிஅமாவாசை உற்சவத்திற்கான ஏற்பாடுகள் தயார்

### தெல்லிப்பழை பிரேதேச செயலகம்

*(யாழ்ப்பாணம்)*

கீரிமலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஆடிஅமாவாசை உற்சவத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தும் தயார் என தெல்லிப்பழை பிரதேச செயலாளர் எஸ்.சுதீஸ்னர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில்,

நாளை ஞயிற்றுக் கிழமை கீரிமலையில் நடைபெறவுள்ள ஆடி அமாவாசை உற்சவத்தினை முன்னிட்டு பல சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல ஆயிரம் பொது மக்கள் வருகை தரக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால் அவர்களின் நன்மை கருதி பல சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காலை 5.00 மணிக்கு மாவைக் கந்தன் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தப் பிரதேசத்திற்கு சென்றடைவார். அன்றைய தினம் தமது பிதிர்க் கடன்களை நிறைவேற்றுவதற்குரிய சகல வசதிகளும் பொது மக்களின் நன்மை கருதி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிதிர்க் கடன்களில் ஈடுபடவுள்ள சகல மதகுருமார்களும் தமது பதிவினை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் சமய, சமூக ஒழுக்கத்தினை முறையாக பின்பற்றுவதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கீரிமலை புனித பிரதேசத்தை சுற்றியுள்ள பிரதான வீதிகளில் அன்றைய தினம் வீதித் தடைகள் அமைக்கப்பட்டு போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபடுவார்கள். போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகள் மட்டும் வீதித் தடைகளை கடந்து சென்று பயணிகளை இறக்கவும் ஏற்றவும் அனுமதி வழங்கப்படும். ஏனைய அனைத்து வாகனங்களும் வாகனத் தரிப்பிடங்களில் நிறுத்த வேண்டும். கீரிமலை புனித பிரதேசத்திற்கு தமது பிதிர்க் கடன்களை நிறைவேற்ற வருகை தரும் சகல மக்களும் கலாசார உடையணிந்து வருவதுடன் பாதணிகளுடன் வருகை தருவதனை முற்றாக தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

பொது மக்களுக்கு தேவையான குடிநீர் வழங்குவதற்குரிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் முதலுதவி மற்றும் தேவையான மருத்துவ சேவை வழங்குவதற்கும் பொது மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கீரிமலை புனித பிரதேசத்தை சுற்றியுள்ள எந்தவொரு பிரதேசத்திலும் போதை சார்ந்த எந்தவொரு பொருளையும் விற்பனை செய்யவோ பயன்படுத்தவோ முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் சிறுவர்களை வியாபார மற்றும் யாசக கடமைகளில் ஈடுபடுத்துவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

பொது மக்களுக்கு இடையூறு மற்றும் பொது அமைதிக்கு பாதகம் ஏற்படுத்தும் எந்தவொரு சம்பவத்திற்கும் அனுமதி கிடையாது என்பதுடன் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மாவைக் கந்தனுக்கு இன்று இரதோற்சவம்

*(மாவிட்டபுரம்)*

2500 வருடப் பழமை மிகு முருக தலமான மாவிட்டபுரம் கந்தசுவாமி தேவஸ்தான காம்யோற்சவத்தின் இருபத்தினான்காம் நாளான இன்று சனிக்கிழமை இரதோற்சவப் பெருவிழா இடம் பெறவுள்ளது.

அதிகாலை 04 மணிக்கு கந்தப்பெருமானுக்கு 108 சங்காபிஷேகம் இடம்பெற்று காலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையினைத் தொடர்ந்து காலை 08 மணியளவில் 45 அடி உயர முகருத்திர ரதத்தில் மாவைக் கந்தப்பெருமான் ஆரோகணித்து அருள்பாலிப்பார். (ம-7)

## கிளிநொச்சியில் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்திற்கு நீர் விநியோகம்

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

*(கிளிநொச்சி)*

கிளிநொச்சியில் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்திற்கு நீர் விநியோகம் இடம்பெறும் என கிளிநொச்சி மாவட்ட தேசிய நீர் வழங்கள் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

தற்போது கிளிநொச்சியில் நிலவுகின்ற வெப்பமான காலநிலை காரணமாக பொது மக்களின் நீர்ப் பாவனையானது வழமைக்கு மாறாக அதிகமாக காணப்படுகின்றது.

அதாவது கிளிநொச்சி நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் உற்பத்தி திறனை விட மக்களின் பாவனை அதிகரித்துள்ளமையால் நீர் விநியோகத்தை 24 மணிநேரமும் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இதன் காரணமாக இனிவரும் நாட்களில் நீரினை மட்டுப்படுத்தப்பட்ட நேர ஒழுங்கில் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் என கிளிநொச்சி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

தொடர்ச்சியாக வெப்பமான காலநிலை நிலவிவருவதன் காரணமாக மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அதனடிப்படையில்

பூநகரி, பொன்னகர், பாரதிபுரம், விவேகானந்த நகர் ஆகிய பகுதிகளுக்கு தினமும் காலை 5 மணி முதல் பகல் 12 மணி வரை நீர் விநியோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக் காலப்பகுதியில் குறைந்த அழுதத்திலும் நீர் விநியோகம் காணப்படுவதனால் பொது மக்கள் நீரை சிக்கனமாகவும், சேமித்தும் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலகம் அறிவித்துள்ளது. (ம-7)

## நாடு முழுவதும் தடையின்றி எரிபொருள் விநியோகம்

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நாடளாவிய ரீதியில் தடையின்றி எரிபொருள் விநியோகத்தை முன்னெடுக்கும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

சுத்திகரிப்பு நிலையங்களில் வருடாந்த பராமரிப்புப் பணி நடைபெற்று வருவதால் களஞ்சியசாலைகளிலும் கையிருப்பை பராமரிப்பதில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதனால், தடையில்லா எரிபொருள் விநியோகம் இடம்பெற்று வருவதாகவும் தனது சமூக வலைத்தளத்தில் அமைச்சர் குறிப்பட்டுள்ளார்.

சுத்திகரிப்பு நிலையங்களில் ஆகஸ்ட் நடுப்பகுதியில் செயற்பாடுகள் மீண்டும் தொடங்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

ஆறு மாதங்களுக்கான எரிபொருள் கையிருப்புக்கான திட்டம், சேமிப்புத்திறன், விநியோகத் திட்டம் தொடர்பான முகாமைத்துவம் குறித்து இதன் போது விரிவாக அமைச்சர் ஆராய்ந்தார். (ம-7)

## வவுனியாவில் விபத்து மூவர் படுகாயம்

வவுனியா பட்டக்காடு வயல்வெளிக்கு அண்மித்த பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் வீதியூடாக வவுனியா நகர் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் முன்னால் சென்ற பிறிதொரு வாகனத்தினை முந்திச்செல்ல முற்பட்ட சமயத்தில் எதிர்த்திசையில் வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவருகின்றது.

இவ் விபத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளமையுடன் மூவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் சம்பவ இடத்திற்கு வருகை தந்த போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓகஸ்ட் மாத இராசி பலன்கள்-2024




## எந்த சூழ்நிலையிலும் நிதானத்தை இழக்காத மிதுன ராசியினரே!

மிதுனம் கிரகநிலை - ராசியில் சந்திரன் - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ), சுக்கிரன் - சுக ஸ்தானத்தில் கேது - பாக்கிய ஸ்தானத்தில் சனி (வ) - தொழில் ஸ்தானத்தில் ராகு - அயன சயன போக ஸ்தானத்தில் செவ்வாய், குரு

கிரகமாற்றங்கள்: 01-08-2024 அன்று சுக்கிரன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 16.08.2024 அன்று சூரியன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.08.2024 அன்று சுக்கிரன் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.08.2024 அன்று செவ்வாய் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து ராசிக்கு மாறுகிறார். 31.08.2024 அன்று புதன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். விடாமுயற்சியுடன் ஈடுபட்டு காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். விருப்பங்கள் கைகூடும். அடுத்தவரை அதிகாரம் செய்யும் போது கவனம் தேவை. வீண்பகை ஏற்படலாம். மற்றவர்களுக்காக பொறுப்புகளை ஏற்காமல் இருப்பது நல்லது. வீண் அலைச்சல் ஏற்படலாம்.

தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். அரசாங்கம் தொடர்பான பணிகளில் சாதகமான போக்கு காணப்படும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் கூடும். திறமை வெளிப்படும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். குடும்பத்தை விட்டு பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேருவார்கள்.

கணவன் மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். விருந்தினர்கள் வருகை இருக்கும். மரியாதையும் அந்தஸ்தும் கூடும். பெண்கள் விடாமுயற்சியுடன் காரியங்களை செய்து சாதகமான பலன் பெறுவீர்கள். பணவரத்து திருப்தி தரும். கலைத்துறையினருக்கு வாக்கு வன்மையால் எல்லா நன்மைகளும் கிடைக்க பெறுவீர்கள்.

பணவரவு மனதிருப்தியை தரும். புதிய நபர்களின் அறிமுகம் அவர்களது நட்பும் கிடைக்க பெறுவீர்கள். எதிலும் முன்னேற்றம் காணப்படும். அரசியல் துறையினருக்கு நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். வாகனங்களை பயன்படுத்தும்போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். நிதி நிலைமை சீர்படும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தடைகள் நீங்கும். எதிலும் முழுமுயற்சியுடன் ஈடுபடுவீர்கள்.

**மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் உங்களது கருத்துக்கு சிலர் மாற்றுக் கருத்து கூறலாம். எதிர்த்து பேசாமல் அமைதியாக இருப்பது நல்லது. மாணவர்களுக்கு எவ்வளவு திறமையாக படித்தாலும் பாடங்கள் கடினமானவை போல தோன்றும். மனதை தளரவிடாமல் படிப்பது வெற்றியை தரும்.

**திருவாதிரை:** இந்த மாதம் அடுத்தவருடன் ஏற்படும் பிரச்சினைகளிலும் வாக்குவாதத்திலும் வெற்றியே கிடைக்கும். பணவரத்தும் கூடும். ஆனால் எந்த காரியத்தில் ஈடுபட்டாலும் அடுத்தவரை நம்புவதிலும் எச்சரிக்கை தேவை. உங்களுக்கு மிகவும் வேண்டியவர் உங்களை விட்டு விலகி செல்லலாம்.



மாற்று மதத்தினரின் உதவி கிடைக்கும்.

**புனர்பூசம்1,2, 3ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த பணவரவு இருக்கும். போட்டிகள் குறையும். புதிய முயற்சிகளில் ஈடுபட தோன்றும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் செய்யும் பணிகள் திருப்திகரமாக நடந்து முடியும். எதிர்பார்த்த இடமாற்றம் வரலாம்.

**பரிகாரம்:** ஸ்ரீரங்கநாதரை வணங்கி வர துன்பங்கள் விலகி இன்பங்கள் தேடி வரும்.

**அதிஷ்ட கிழமைகள்:** புதன், வியாழன்.

**சந்தி ராஷ்டம தினங்கள்:** 18, 19. **அதிஷ்ட தினங்கள்:** 11, 12.




## உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் கடக ராசியினரே!

கடகம் கிரகநிலை - ராசியில் சூரியன், புதன் (வ), சுக்கிரன் - தைரிய வீரிய ஸ்தானத்தில் கேது - அஷ்டம ஸ்தானத்தில் சனி (வ) - பாக்கிய ஸ்தானத்தில் ராகு - லாப ஸ்தானத்தில் செவ்வாய், குரு - அயன சயன போக ஸ்தானத்தில் சந்திரன்.

கிரகமாற்றங்கள்: 01.08.2024 அன்று சுக்கிரன் ராசியில் இருந்து தனவாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 16.08.2024 அன்று சூரியன் ராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.08.2024 அன்று சுக்கிரன் தனவாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.08.2024 அன்று செவ்வாய் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 31.08.2024 அன்று புதன் ராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** நீங்கள் குடும்பத்தினரை நேசிப்பவர்கள். இந்த மாதம் புண்ணிய காரியங்களில் ஈடுபட்டு மனதிருப்தியடைவீர்கள். தனாதிபதி சூரியன் சஞ்சாரம் மூலம் எல்லாவற்றிலும் சாதகமான பலன் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக நடக்கும். புத்தி தெளிவு ஏற்படும். உடல் ஆரோக்கியம் பெறும். மனதில் தன்னம்பிக்கையும், தைரியமும் அதிகரிக்கும். மனகுழப்பம் நீங்கும். பணவரத்தை அதிகப்படுத்தும்.

தொழில் வியாபாரத்தில் நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினை தீரும். அரசு மூலம் நடக்க வேண்டிய பணிகளில் இருந்த தொய்வு நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகள் கிடைக்கும். மரியாதை, அந்தஸ்து ஆகியவை உயரும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான கொண்டாட்டங்கள் இருக்கும். பெரியோர்கள் மூலம் காரிய அனு கூலம் ஏற்படும்.

கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகள் மூலம் சந்தோஷம் கூடும். உல்லாச பயணங்கள் செல்ல நேரலாம்.

பெண்களுக்கு திறமை வெளிப்படும். காரியங்கள் அனுகூலமாக நடக்கும். மனதில் தைரியம் உண்டாகும். கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கப் பெறு சிரமங்கள் குறையும். வேலைப் பளு குறைந்து காணப்படுவார்கள். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். திடீர் செலவு உண்டாகும்.

அரசியல்துறையினருக்கு எல்லா காரியங்களும் அனுகூலமாக நடக்கும். மனக்கவலை நீங்கி நிம்மதி உண்டாகும். உங்கள் வாழ்வில் முன்னேற்றம் காண முழு மூச்சுடன் செயற்படுவீர்கள். பொருட்களின் சேர்க்கை அதிகரிக்கும். வாகனம், பூமி மூலம் லாபம் கிடைக்கும்.

மாணவர்களுக்கு மனதில் இருந்த வீண் பயம் அகலும். கல்வியில் வெற்றி பெற பாடுபடுவீர்கள்.

**புனர்பூசம் 4 ஆம் பாதம்:** இந்த மாதம் குடும்பத்தில் இருப்பவர்கள் உங்களை அனுசரித்து செல்வது மனதுக்கு இதமாக இருக்கும். கணவன், மனைவிக்கிடையே சிறிய வாக்குவாதம் ஏற்படலாம். பிள்ளைகள் உங்களை புரிந்து கொண்டு நடப்பது மனதுக்கு நிம்மதியைத் தரும்.

**பூசம்:** இந்த மாதம் சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி உண்டாகும். அடுத்தவரை நம்பி பொறுப்புகளை ஒப்படைப்பதில் கவனம் தேவை. மாணவர்களுக்கு கல்வியில் இருந்த போட்டிகள் விலகும். பாடங்களை படிப்பதில் இருந்த இடையூறுகள் நீங்கும்.

**ஆயில்யம்:** இந்த மாதம் துன்பம்



வருவது போல் இருக்குமே தவிர, ஆனால் வராது. மனதில் ஏதேனும் கவலை, பயம் அவ்வப்போது ஏற்படும். உங்களது பேச்சே உங்களுக்கு எதிர்ப்பை உண்டாக்கலாம். யோசித்து பேசுவது நல்லது. ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும்.

**பரிகாரம்:** அருகில் இருக்கும் அம்மன் ஆலயத்திற்குச் சென்று நெய்தீபம் ஏற்றி வணங்கி வர குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நீண்ட நாள் பிரச்சினை தீரும் ;

**அதிஷ்ட கிழமைகள்:** வியாழன், வெள்ளி ;

**சந்திராஷ்டம தினங்கள்:** 20, 21 ;

**அதிஷ்ட தினங்கள்:** 13, 14 .

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளியவளை...

முல்லைத்தீவு ஜங்கன்குளம் பகுதியில் நேற்று அதிகாலை யானையின் சடலம் இருப்பதாக விவசாயிகள் அவதானித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதனையடுத்தே குறித்த யானையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. குறித்த யானையின் இறப்புக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

அப்பகுதியில் ஏற்பட்டுள்ள இந்த யானையின் மர்மமான இறப்பு தொடர்பில், வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இணைந்து விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,299)

## யாழ்.செம்மணி...

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் கஞ்சா போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். வளைவுக்கு அருகில் இளைஞன் ஒருவர் சந்தேகத்திற்கு இடமான முறையில் காணப்படுவதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த அதிரடிப் படையினர் இளைஞனைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், வவுனியா பகுதியைச் சேர்ந்தவர் எனவும், இளைஞனிடம் இருந்து 20 கிலோ 175 கிராம் கஞ்சா போதைப்பொருளையும் மீட்டனர்.

மீட்கப்பட்ட கஞ்சா போதைப்பொருளையும், கைது செய்யப்பட்ட இளைஞனையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் அதிரடிப் படையினர் ஒப்படைத்துள்ளனர். (ம-7,33)

## பல பொருட்...

அதன்படி கிழங்கு (சீனாவில் இருந்து இறக்குமதி) 1கிலோ - 240.00, வெள்ளை கௌபி 1கிலோ - 998.00, பெரிய வெங்காயம் (இந்தியாவில் இருந்து இறக்குமதி) 1கிலோ - 265.00, சிவப்பு கௌபி 1கிலோ - 940.00, கீரி சம்பா 1கிலோ - 254.00, பிரவுண் சீனி 1கிலோ - 370.00, சிவப்பு பருப்பு 1கிலோ - 285.00, வெள்ளைச் சீனி 1கிலோ - 254.00 (ம-7)

## பொலிஸில்...

மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்விபத்துச் சம்பவித்துள்ளது.

இதில் நடந்து சென்ற நபர் மற்றும் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற இளைஞன் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில் நடந்து சென்ற நபர் உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## தாளையடி...

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி ஏற்பாடுகளின் கீழ் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு அமைச்சு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம் 266 மில்லியன் டொலர்கள் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு அமைச்சர் ஜீவன் தொண்டமான், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம-7)

## யாழ்.மக்களின்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இங்கு மேலும்கருத்துத்தெரிவிக்கையில்,

"இந்த நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பிக்க காணி வழங்கிய மக்களுக்கு நன்றி. தாளையடிப் பகுதிக்கு தனியானதொரு கிராம சேவகர் பிரிவை நிறுவுமாறு மக்கள் கோரியுள்ளனர். அதனைச் செய்யுமாறு ஆளுநருக்கு பணிப்புரை விடுப்பேன். இந்தச் சுத்திகரிப்பு நிலையம் யாழ்ப்பாணத்தின் குடிநீர் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வை வழங்கும்.

எதிர்காலத்தில் வளவ கங்கை நீரத் திட்டத்தையும் ஆரம்பிப்போம், அதனால் பூநகரிக்கும் நீர் கிடைக்கும். அதே போல் யாழ்.நதி நீர் திட்டத்தை (River For Jaffna) ஆரம்பிப்போம். இந்தத் திட்டங்கள் வந்தால் யாழில் நீர் பிரச்சினை இருக்காது. வடமராட்சி செழிப்பான பிரதேசமாகமாறும்.

இந்த நீருக்கு நாம் கட்டணம் செலுத்த வேண்டும். அதனால் சூரிய சக்தியைப் பயன்படுத்தி கட்டணத்தை குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம். இந்த பகுதிக்கு நீர் வழங்கல் முறைகளை செயற்படுத்தி நவீன விவசாயத்தை செயற்படுத்துவோம். நீருக்கு கட்டணம் செலுத்தும் பட்சத் தில் ஒவ்வொரு லீட்டரிலும் உச்ச பயனை அடைய வேண்டும் என்றார். (ம-7)

## நாட்டின்...

பிரதானி பீட்டர் ப்ரூயர் தலைமையிலான குழு கடந்த 25ஆம் திகதி முதல் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு அவதானம் செலுத்தியிருந்தது.

தங்களது அவதானம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் பிரதானி பீட்டர் ப்ரூயர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டம் பாராட்டத்தக்க விளைவுகளைக் காட்டியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பெரும்...

முதல் தியாகத்தை அரச தலைவரே செய்ய வேண்டும்.

அரச தலைவர் நாட்டுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

எனினும்இலங்கையில் அது தலைகீழாகவே நடந்துள்ளது.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில், பெரும் செல்வந்தர்களைக் காப்பாற்றிவிட்டு, நாட்டில் உழைக்கும் மக்களின் நலனில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

இவ்வாறான சூழ்நிலையில் பெரும் செல்வந்தர்கள், பணக்காரர்கள் என சகலரும் இந்தத் தியாகத்தைச் செய்ய வேண்டும் என தாம் வலியுறுத்தியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-7)

## ஜே.வி.பியின்...

மாளிகாவத்தை P.D.சிறிசேன மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய ஆசிரியர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதில் பிரதானமான செயற்பொறுப்பு கல்விக்கே இருக்கிறது. அண்மைக்காலமாக முன்னேற்றமடைந்த நாடுகளை நாங்கள் எடுத்துப் பார்த்தால் அத்தகைய ஒவ்வொரு நாட்டிலும் அந்த நாடுகளை முன்னேற்றுவதற்கான பிரதான பங்கினை வகித்தது கல்வியாகும். உங்களுக்கு ஞாபகமிருக்கும், இலவசக் கல்விச் சட்டம் அங்கீகரிக்கப்படுகையில் கன்னங்கர அவர்கள் விடுத்த ஒரு கூற்று இருக்கிறது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

---

**மஹஜன சம்பத**
திகதி 2024.08.02
சீட்டிழுப்பு இலக்கம் 5553
T 4 9 2 7 3 0
அத சம்பத T 2 7 3 0 — சீட்டிழுப்பு இலக்கம் 128

**தன நிதானய**
திகதி 2024.08.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1583
N 41 53 62 69 N
Double Chance 01591

**மெகா பவர்**
திகதி 02/08/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1901
Q 03 15 18 52 80
Double Chance 88387

**லக்கி 7 VIP**
திகதி 2024.08.02
சீட்டிழுப்பு இலக்கம் 0379
D 2 8 1 9 0 3 D

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3795
சீட்டிழுப்பு திகதி 02.08.2024
C 36 41 58 70
C 00035

**HANDAHANA**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.08.02
சீட்டிழுப்பு இலக்கம் 0862
மீனம் 09 28 32 43 மீனம்
01674 09

**சுபிரி தன சம்பத** — உத்தியோகபூர்வ முடிவுகள்
02.08.2024 வெற்றி வாரம் 261
L 3 7 3 7 6 8
73793
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,832,620.00

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 2527 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 02.08.2024 தினம் வெள்ளி
06 12 16 37 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 102,349,071.20

**சனிதா**
திகதி 2024.08.02 வெற்றி வாரம் 4688
48 50 56 63 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,172,858.40
88636

**சசிரி**
வெற்றி வாரம் 510
சீட்டிழுப்பு திகதி 2024.08.02
20 29 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,954,200/-

**ராசி**
சீட்டிழுப்பு வாரம் 4239 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.08.02 தினம் வெள்ளிக்கிழமை
01 23 32 34 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,131,000.40
201337

**கப்ருக**
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 36 07 25 34 53
1703 02.08.2024 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 536,707,643.00

**அட கோடிபதி**
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2353
சீட்டிழுப்பு திகதி : 2024.08.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,522,404.80
45 46 49 50 Z
385596

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களுக்கு நிரந்தர அரச அதிபரை நியமியுங்கள்

## ரணிலுக்கு விக்னேஸ்வரன் எம்.பி கடிதம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான நிரந்தர அரச அதிபர்களை உடனடியாக நியமிக்குமாறு கோரி, அவசர கடிதமொன்று பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான நிரந்தர அரச அதிபர்களின் நியமனம் தொடர்பில் ஏற்கனவே விக்னேஸ்வரனால் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதப்பட்டிருந்த போதும் அதனை நிறைவேற்றாது தரம் போதாமை காரணமாகப் பதில் அரச அதிபர்கள் நியமிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் நிரந்தர அரச அதிபர்களை நியமிக்குமாறு கோரி இந்த அவசர கடிதம் சி.வி.விக்னேஸ்வரனால் ஜனாதிபதிக்கு இரண்டாவது தடவையாகவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7)


## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: (214)

074 17 37 684

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

1%

- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு: (216)

075 033 6759

## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

STUDY IN UK

ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

*IELTS Lifeskills A1 (UK Spouse Visa exam)
*Dutch(டச்) - Netherland/Holand - Classes
*IELTS Academic & General / IELTS UKVI

வகுப்புகள் நடைபெறுகின்றன. (1585)

WEC COLLEGE

புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்

0779265447 / 0217200989

கிளைகள் –
சாவகச்சேரி/வவுனியா / புதுக்குடியிருப்பு

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0913)

## அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்

குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

(C-0913)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர் யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய் நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768226240 0768226241

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street,Jaffna.

(C-0913)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## வேலையாட்கள் தேவை

மானிப்பாயில் இயங்கும் பேக்கரி ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். (ஆண்/பெண்)
வேலைநேரம் : 12.30pm - 12.00am (220)

077 325 3610

## மின்சார கட்டணத்திலிருந்து விடுதலை

சீனா(China) மற்றும் இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட சூரிய விளக்குகள் (Solar Lights) வீட்டுத் தெரு, முற்றம், தோட்டம் ஏனைய இடங்களிற்கும் பொருத்துவதற்கு எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் பொருத்தியும் தரப்படும்.

விலை 7000 ரூபாவிலிருந்து



ஆர்க் . என் . கம்பனி

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

N5 எலக்ரிக்கல்ஸ்

- 77, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 312 7895

Hotline : 071 535 7799/ 071 554 7973 (1606)

## Altom Chemistry centre

(வேம்படி சந்தி. Bcas அருகில் யாழ். நகர்)

Physics N.Edison B.Sc

Chemistry S.Vasu B.Sc

26/25/24 A/L வகுப்புக்கள் நடைபெறுகின்றன

தொடர்புகளுக்கு :

077 90 35 663 (1611)

## காணி குத்தகைக்கு

கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டை வீதியில் இருந்து 200m உட்பக்கமாக உள்ள 9பரப்புக் காணி விவசாயம் செய்வதற்கு குத்தகைக்கு வழங்கப்படும். (1591)

தொடர்பு:

077 044 6019
076 791 9438

## காணி, வீடு விற்க வாங்குவதற்கு

காணிகள், வீடுகள், வியாபார நிலையங்களை விற்பதற்கும், வாங்குவதற்கும் நம்பிக்கையான இடம்.

உங்களின் ஒரே தெரிவு

" Easy Real Estate " (1612)

076 742 4301, 075 710 9639
Whatsapp:- +00 94 75 710 9639

## அலுவலகப் பயன்பாட்டிற்கு வீடு வாடகைக்கு

கைதடி - மானிப்பாய் பிரதான வீதியில் (உடுவில் மகளிர் கல்லூரிக்கும் மருதனார்மடம் சந்திக்கும் இடையில்) அமைந்துள்ள சகல வசதிகளுடன்கூடிய மேல்மாடி வீடு (3000 சதுர அடி) அலுவலகப் பயன்பாட்டிற்கு மாத்திரம் வாடகைக்குண்டு. வாகனத் தரிப்பிட வசதியும் உண்டு. (1613)

077 115 5909

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 112 பரப்புக் காணியில் 24 பரப்பு காணி மட்டுமே விற்பனைக்கு உள்ளது.

நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் (2வது காணி)
- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்றுச் சூழல்.
- ஒரு பரப்பின் விலை 5½ இலட்சம் (550,000/=)
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் : (காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை)

(1597)

தொடர்புகளுக்கு:- ஜெயம்

077 814 7389
077 986 5457

## மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான (SOCKS) காலுறைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை நலன்புரிச் சங்கங்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும். (C-911)

தொடர்புகளுக்கு: 076 315 6470

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 243/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 274/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 390/= | |
| 1 Kg சம்பா | - 230/= | |
| 1 Kg றவை | - 285/= | |
| 1 L மரக்கறி எண்ணெய் | - 680/= | |
| 400g நெஸ்டமோல்ட் | - 740/= | ~~780/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 145/= | ~~175/=~~ |
| 01 Lux Soap | - 150/= | ~~160/=~~ |
| 70 g Baby Soap | - 115/= | ~~145/=~~ |
| 400 g சஸ்ரயன் | - 3450/= | ~~3900/=~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 310/= | ~~380/=~~ |
| 01 Ocean மீன் ரின் | - 395/= | ~~500/=~~ |

No Limt
400g Anchor
1010/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (221)

Happy Supermarket
0777 8080 30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.